Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு -.02 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 03 புதன்கிழமை (19.09.2012) பக்கங்கள் 20 ஓசை - 353

விஷானி நகை மாளிகை
மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)












# அரசின் முதலமைச்சர் கிழக்கில் பதவியேற்பு

## ஊடக புரளிகளுக்கு முற்றுப்புள்ளி





நடந்துமுடிந்த மாகாண சபைத் தேர்தலின் அடிப்படையில் எதிர்பார்த்தபடியே முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையில் மாகாண ஆட்சி நிறுவப்பட்டிருக்கிறது. கிழக்கின் புதிய முதலமைச்சராக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய நஜீப் அப்துல் மஜீத் நேற்று உத்தியோகபூர்வமாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டிருக்கிறார். தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னர் கிழக்கில் ஆட்சி அமைப்பது யார் என்பது குறித்து அரசியல் கட்சிகள் சில தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டு கள யதார்த்தத்திற்குப் புறம்பாகக் கருத்துக்களைக் கூறி தவறான நம்பிக்கைகளை ஊட்ட முயற்சித்து வந்தன. ஆனால் மூவின மக்கள் வாழும் கிழக்கின் அரசியல் கள யதார்த்தத்தைச் சரியாக துடிப்பறிந்து மாகாண ஆட்சி அரசின் வசமாகும் என்பதை ஏற்கனவே தினமுரசு தனது வாசகர்களுக்குத் தெரிவித்திருந்த்து. எதிர்பார்த்தபடியே கிழக்கின் ஆட்சி இப்போது அரசின் வசமாகிவிட்டது. மாகாண அமைச்சரவைப் பகிர்வில் கூட இழுபறி நிலை இருப்பதாக தகவல்கள் கசிகின்றன.

19 ஆம் பக்கம் பார்க்க

# மருத்துவ சேவை விஸ்தரிப்பு; 500 மில்லியன் நிதி உதவி

## வடக்கில் அமுலாகிறது செயற்திட்டம்

(கொழும்பு)

வடக்கில் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்கும் மருத்துவ மனைகளை அபிவிருத்தி செய்வதற்கும் இடம்பெயர்தோருக்கான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்) நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இச் செயற்திட்டத்திற்காக மேற்படி நிறுவனம் சுமார் ஐந்நூறு மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்த உதவித்திட்டம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தப்பட விருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் 14 வாகனங்களை அமைப்பின் இலங்கை பிரதிநிதி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் முதற்கட்டமாகக் கையளித்தார். இந்த 14 வாகனங்களில் 7 அம்புலன்ஸ் வண்டிகளும் 7 கப்ரக வாகனங்களும் இடம் பெற்றுள்ளன. யாழ். போதனா வைத்தியசாலை, கிளிநொச்சி பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, கொக்கிளாய் தள வைத்திய

19 ஆம் பக்கம் பார்க்க

# முள்ளிவாய்க்காலில் ஐ.நா. அதிகாரிகள்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலுக்கு நேற்று விஜயம் செய்தனர். நேற்றுப் பிற்பகல் அப்பகுதிக்கு விஜயம் செய்த ஐ.நா. அதிகாரிகள் அப்பகுதிகளில் அணமையில் மீள்குடியேறிய மக்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்ததுடன் யுத்தப் பாதிப்புத் தொடர்பான நிலைவரத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

தொடர்ந்து மதியம் 1.00 மணியளவில் முல்லை மாவட்டச் செயலகத்தில் அரச அதிபருடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர். இச சந்திப்புக்களின் போது முல்லை மாவட்டக் கட்டளைத் தளபதி எல்.பி.ஆர். மார்க் மற்றும் செயலக உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். கண்ணிவெடி அகற்றல், மீள்குடியமர்வு போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. அதேவேளை, கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் பிரதிநிதிகள் மாவட்ட அரச செயலகத்தில் அரச அதிபர் மற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணத்தில்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் மைக்கேல் ஜே.சிஸன் இரண்டு நாள் விஜயமாக நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார். நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வருகைதந்த இவர யாழ்ப்பாணத்தில் ஐ.ஓ.எம். பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதோடு புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கான உதவிகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டுள்ளார். மேலும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியைச் சந்தித்து யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரது செயற்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்தார். யாழ். ஆனைப்பந்திச் சந்தியில் அமைந்திருக்கும் யாழ். மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்திற்கு விஜயம் செய்து அங்கு சம்மேளனத்தின் தலைவர் பூரணசந்திரன் உள்ளிட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரை

19 ஆம் பக்கம் பார்க்க

இன்று மட்டும்
பல்கலைக்கழக அனுமதியும் தொழில்வாய்ப்பும்
70% கட்டணக்கழிவு
வங்கிக்கடன் வசதி
25-50% புலமைப்பரிசில்கள்
(C/1727)
பார்க்க, பக்கம் 20 >>>

# சிவில் பாதுகாப்புக் குழுவில் சமூகவிரோதிகளுக்கு இடமில்லை

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் சிவில் பாதுகாப்புக் குழுக்களில் உள்வாங்க இடமளிக்கக்கூடாது எனப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கணடவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் நடைபெற்று முடிந்த இந்தக் காலப்பகுதியில் சில தீயசக்திகள் மக்களிடையே குழப்பும் நோக்கில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் பொலிஸாருக்கும், மக்களுக்கும் இடையில் இருக்கும் உறவுகளை குழப்ப சில சமூகவிரோதிகள் சிவில் பாதுகாப்புக் குழுவில் இணைந்து செயற்பட நினைப்பார்கள். அவ்வாறானவர்களை இணைப்பதற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# அனலைதீவிற்கு பொலிஸ் நிலையம் யாழ்.செயலகக் கூட்டத்தில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு, எழுவைதீவு போன்ற பகுதிகளுக்குத் தனித் தனி பொலிஸ் நிலையங்கள் அமைத்துத் தர வேண்டும் என்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் எழிலரசி யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தார்.


இக்கூட்டத்தில் தமது குறைகளையும், தேவைகளையும் கூறுமாறு அமைச்சர் கேட்ட போதே இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தற்போது இத்தீவுப் பகுதிகளில் இளைஞர்களின் சேட்டை, குடும்பத்தகராறு எனப் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதற்கு ஊர்காவற்றுறைப் பொலிஸாரே வந்து பிரச்சினை களுக்குத் தீர்வு காணவேண்டியுள்ளது.

சிலவேளைகளில் வருவதும் இல்லை. இதற்குப் பதிலளித்த பொலிஸ் பொறுப்பதிகாரி காரை நகர், ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய 3 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் ஒரு பொலிஸ் நிலையம் மட்டுமே உள்ளது என்றும் ஆளணித் தட்டுப்பாடு நிலவுவதாகவும் கூறப்பட்டது.

இதற்கு அமைச்சர் பிரதிப் பொலிஸ் மா அதிபருடன் கலந்துரையாடி விரைவில் அங்கு பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். (இ)

# உடுவில் கற்பகப் பிள்ளையார் தங்கரத வெள்ளோட்டம்



உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலில் புதிதாக அமைக்கப்பெற்ற தங்க ரதம் சதுர்த்தி தினமாகிய இன்று மாலை 4.00 மணிக்கு வெள்ளோட்டம் காணவுள்ளது.

தொடர்ந்து தங்க ரதத்தை உருவாக்கிய ஸ்தபதி கதிர்காமநாதன் கதிர்ரஞ்சன் மற்றும் குழுவினர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

## 'வளையாபதி' நூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்படும் நாட்டுக்கூத்து நூல்களின் வரிசையில் புதிய வெளியீடாக கவிஞர் செ.அ.அழகராஜாவின் ஆக்கத்தில் உருவான 'வளையாபதி' தென்மோடி நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழா 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்குப் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையக மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக திருமறைக் கலாமன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

# புலோலியில் திருட்டு ஒன்பது பேர் கைது

(வடமராட்சி)

புலோலி புற்றளைப் பிள்ளையார் ஆல்யத்திற்கு அருகாமையில் உள்ள 3 வீட்டில் ஒரே நேரத்தில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 1.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இப்பகுதியில் உள்ள மார்க்கண்டு தவலிங்கம் என்பவரது வீட்டின் ஜன்னலை உடைத்துக் கொண்டு உட்சென்ற திருடர்கள் 50 ஆயிரம் ரூபா பணம், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோதிரம், ஒரு தங்கச் சங்கிலி, ஒரு சோடி கால் சங்கிலி என்பவற்றை திருடிக்கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை, மறுவீட்டில் உட்புகுந்த இத்திருடர்கள் அங்குள்ள மின்விசிறி, உடு புடவைகள், ஒன்றரைப் பவுண் சங்கிலி 2 மோதிரம் என்பவற்றைக் களவாடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து அருகிலுள்ள இன்னொரு வீட்டுக்குள் நுழைந்த குறித்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்களையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இப்பிரதேசத்தில் குடிமனைகள் குறைவாகவுள்ளதாகவும், சனநடமாட்டம் இரவு வேளைகளில் மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இச்சம்பவம் தொடர்பாக 9 பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01,116)

# சவாரி மாடுகளைக் காணவில்லை

(புத்தூர்)

புத்தூர் கிழக்குப் பிரதேசத்தில் மேய்ச்சலுக்காக நின்ற 2 சவாரி மாடுகள் காணாமல் போயுள்ளதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தில் உள்ள சரஸ்வதி வீதியில் வசிக்கும் ந.ரவீந்திரன் என்பவரின் மாடுகளே காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பெறுமதி 3 இலட்சம் ரூபா எனவும், மாடுகளுக்கு M.R என குறியிடப்பட்டுள்ளதாகவும் உரிமையாளர் தெரிவித்தார். (18)

# திருப்தியற்ற வீதிப் புனரமைப்பு பிரதேச மக்கள் மனம் கொதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாய் ஊடாக திருகோணமலை செல்லும் பிரதான வீதி சீரற்ற முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதி முன்னர் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகச் சேதமடைந்திருந்தது. இதன் பின்னர் தற்போது இவ்வீதி காப்பற் வீதியாகப் புனரமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருந்தாலும், அவை சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக வீதிப் புனரமைப்புப் பணிகள் புதிதாக இடம்பெறுகின்ற போது அரைப்பகுதி வீதியை முதலிலும் மற்றைய பகுதி பின்னரும் செய்து வருகின்றனர். ஆனால் இங்கு முதற் பகுதி வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் உடனடியாக அடுத்த பகுதி வீதி புனரமைக்கப்படுகிறது. இதனால் முதற்பகுதி வீதி போக்குவரத்துக்கு உகந்ததாக வரும் முன்னரே வாகனப் போக்குவரத்துக்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

மேலும் வீதிப் புனரமைப்பின் போது கிரவல் பரப்பப்பட்டு அதன் பின்னர் கல் பரப்பப்பட்டு தண்ணீர் ஊற்றிப் பின்னர் காப்பற் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதன் புனரமைப்பிற்கு சிறிது கால இடைவெளி விடவேண்டும்.

இப்புனரமைப்புப் பணிகளில் அடுத்ததாக விரைவாக மேற்கொள்ளப்படுவதாகவும் இதனால் நீண்ட காலத்திற்கு இவ்வீதி சேதமடையாது இருக்குமா எனச் சந்தேகம் கொள்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அபிவிருத்திப் பணிகள் நீண்டகாலம் நிலைத்து நிற்க வேண்டும் என்ற நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இவ்வீதிப் புனரமைப்புப் பணிகள் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# மீசாலையில் வழிப்பறி

(சாவகச்சேரி)

இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகி பணம், நகை, கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றைப் பறிகொடுத்த பரிதாப சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சாவகச்சேரி வடக்கு, மீசாலையைச் சேர்ந்த வேலாயுதம் செல்வராசா (வயது-56) என்ற மின்சார சபை ஊழியரே பரிதாப நிலைக்கு உட்பட்டவராவார்.

கடமை முடிந்து வீடு திரும்பும்போது சாவகச்சேரி எரிபொருள் நிலையத்துக்கருகாமையில் சைக்கிளை நிறுத்தி விட்டு வீட்டுக்கான பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காகச் சென்றவேளை 2 நபர்கள் வழி மறித்து தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கைக்குள் வரும்படி அழைத்துச் சென்று கொடூரமான முறையில் தாக்கி ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான 2 மோதிரங்கள், 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத்தொலைபேசி, 15 ஆயிரத்து 800 ரூபா பணம் என்பவற்றைப் பறித்தெடுத்ததுடன், முகத்தில் தாக்கியபின் இச்சம்பவத்தை வெளியில் கூறினால் கொன்று விடுவேன் என்று எச்சரித்தபின் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (11)

# சேவைநலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் கடந்த 34 ஆண்டுகள் மனைப்பொருளியல் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் அளப்பரிய சேவையாற்றி ஓய்வுபெறும் திருமதி இராஜேஸ்வரி கொன்ஸ்ரன்ரைனின் சேவைநலன் பாராட்டும், மணி விழாவும் இன்று புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

## சேவை நலன் பாராட்டும், மணி விழாவும்

19.09.2012

திருமதி இராஜேஸ்வரி கொன்ஸ்ரன்ரைன்



மணிவிழாக் காணும் மடு இராஜேஸ்வரி அம்மாவே
நீங்கள் புனிதர் சாள்ஸ் பள்ளியிலே
பண்புடன் பணி செய்த நாட்கள்
பசுமரத்தாணிபோல் பள்ளியில் பதிந்துள்ளது.

எங்கள் பள்ளியிலே துள்ளிவரும் பாலகரை
பாசமுடன் அணைத்து பாடம் புகட்டினீர்
புனிதர் சாள்ஸ் பள்ளியிலே முப்பத்துநான்கு ஆண்டுகள்
ஆசிரியர் பணிக்கு அன்னையாய் விளங்கும்
மூத்த ஆசிரியத்தாயே! எங்களுக்கு
தாயாக, சகோதரியாக, ஆலோசகராக
வித்தைகள் பல கற்றுத் தந்தீர்கள்.

இறை ஆசியுடன்
இனிதே வாழ்ந்திட வாழ்த்துகின்றோம் அம்மா!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/புனித சாள்ஸ் ம.வி.

(R/156)

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



முதலாவது அகவையில்


HAPPY BIRTHDAY

HAPPY BIRTHDAY

பெயர் : த.தரணிபன்,
முகவரி :
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

# எழுத்தாளனின் கலைப்படைப்புத்திறன் கற்கவோ, கற்பிக்கவோ முடியாது

— பேராசிரியர் சிவலிங்கராஜா —



(யாழ்.நிருபர்)

சிறுகதைக்கு உருவம், உள்ளடக்கம் இரண்டும் இன்றியமையாததாகும் சிறந்த சிறுகதையில நல்ல கதையம்சம் இருக்க வேண்டும். அது ஏதாவது ஒரு நிகழ்ச்சியை மட்டுமே விபரிப்பதாக இருக்க வேண்டும். ஒரு மூச்சில் படிக்கக் கூடியதாக அதை அமைக்க வேண்டும்.

இத்தகைய சிறுகதையின் பண்புகள் கொண்டவைதான் எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் எழுதும் சிறுகதைகள் என பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தெரிவித்தார்.

கே.ஆர்.டேவிட் எழுதிய "பாடுகள்" சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சிறுகதைகள் குறுகியகாலத்தில் படித்து முடிப்பதற்காகவே தோன்றின. எனினும், அது ஒன்று மட்டுமே அதன் இலக்கணமாகி விடவில்லை. இலக்கியம் பல பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு வடிவம் உண்டு. தனித்தனியே சில இலக்கியங்கள் உள்ளன.

சிறுகதை என்பது இலக்கியத்தின் ஒருபகுதி. இலக்கியத்தின் ஒரு வடிவம். இலக்கியம் என்பது ஒரு கலை, கலையைப் படைப்பது படைப்புத்திறன். படைப்புத்திறனை ஒருவன் இன்னொருவனுக்குக் கற்பிக்க முடியாது. ஒருவனிடமிருந்து இன்னொருவன் கற்றுக் கொள்ளவும் முடியாது.

சிறுகதை என்பது வாழ்க்கையின் சாளரம். சுவரில் துப்பாக்கி தொங்கவிடப்பட்டிருக்கிறது எனத் தொடங்கும் சிறுகதை, முடிவதற்குள் துப்பாக்கி வெடித்தே தீரவேண்டும். கதை வாசித்து முடிய இன்னொரு கதைக்கான புலம் வாசகன் மனதில் விரியவேண்டும்.

சிறந்த சிறுகதை எழுத்தாளரான கே.ஆர்.டேவிட் அவர்களுக்கு இருக்கிற சமூகப் பெறுமானம் அவரது படைப்புக்களில் பிரதிபலிக்கிறது. இன்று நூல் வெளியீட்டு விழாக்கள் என்றால் பத்துப்பன்னிரண்டு பேர் தான் வருவார்கள். கதிரை இருக்கிறதா என்று தேடிப் பார்த்து இருக்குமளவிற்கு இந்த மண்டபம் நிறைந்த மக்கள் இவ்வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்திருப்பது எழுத்தாளர் டேவிட்டின் சமூகப் பெறுமானத்தை வெளிப்படுத்தி நிற்கிறது எனத் தெரிவித்தார். (10)

## தொற்றாத நோய்குறித்து அலுவலர்களுக்கு பரிசோதனை

(திருநெல்வேலி)

நல்லூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் தொற்றாநோய்கள் தொடர்பான மருத்துவப் பரிசோதனை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

125 பேர் வரையானோர் இம் மருத்துவப் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டனர். இவர்களுக்கு உடற் திணிவுச் சுட்டி, குருதியில் குளுக்கோசின் அளவு, குருதி அமுக்கம் என்பன பரிசோதனை செய்யப்பட்டன. தொற்றா நோய்கள் உள்ளவர்கள் என இனங் காணப்பட்டவர்கள் நல்லூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அருகாமையில் அமைந்துள்ள குடும்ப நல சுகாதார நிலையத்திற்கு வருகை தந்து மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இப்பரிசோதனை முகாமில் யாழ்.மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறை வைத்தியர்கள கலந்து கொண்டனர்.

நல்லூர் பிரதேசத்துக்குட்பட்ட ஏனைய அரச காரியாலயங்களிலும் நல்லூர் சுகாதாரப் பணிமனையினால் இம் மருத்துவ பரிசோதனைகள் நடாத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (137)

## தெய்வீகப் பேருரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு யாழ் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் தெய்வீகப் பேருரைகள் தொடர்ச்சியாக ஆலயத்தில இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை "விஷ்ணு அவதார மகிமை" என்னும் விடயம் பற்றி கோப்பாய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், நாளை வியாழக்கிழமை 'அனுமனின் நுண்ணறிவு' என்னும் விடயம் பற்றி யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் நாக. தமிழிந்திரன், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 'செஞ்சோற்றுக்கடன் தீர்த்தவர்கள்' என்னும் விடயம் பற்றி யாழ்.பிரதேச சமுர்த்தி அலுவலர் ரி.கருணாகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## விஞ்ஞான வினா - விடைப்போட்டி

(அச்சுவேலி)

யாழ்ப்பாண வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட விஞ்ஞான வினா- விடைப் போட்டிகள் யாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரையும் நடாத்துவதற்கு யாழ் வலய விஞ்ஞானக் கல்விப்பிரிவினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் குறித்த தினத்தன்று கோட்ட ரீதியாக நடாத்தப்பட்டு அவற்றின் மூலம் வலய மட்டத் தெரிவுகளும் இடம்பெறவுள்ளன. யாழ்ப்பாண கோட்ட பாடசாலைகளுக்கான போட்டிகள் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கான போட்டிகள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும், கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

மேலும் அனைத்துக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்குமான ஆங்கில மொழி மூலப் போட்டிகள் யாவும் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் மட்டும் நடைபெறவுள்ளதால், இப்போட்டிகள் யாவற்றிலும் பங்குபற்றும் அனைத்து மாணவர்களும் உரிய தினத்தன்று தமக்குரிய பொறுப்பாசிரியர்களுடன போட்டி நடைபெறும் பாடசாலைக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இப்போட்டிகள் தொடர்பான அனைத்து விடயங்களும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

## யாழ். மாவட்ட மட்டத்திலான இலக்கியப்போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி...

(வடமராட்சி)

மாவட்ட மட்ட இலக்கிய விழாவை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

ஆங்கில மொழி, திறந்த பிரிவு, கவிதைபோட்டி.

நே.அருள்நிதி(கரவெட்டி), க.பகீரதி(துன்னாலை).

பாடலாக்கம்.

கே.ஜெயப்பிரதாஜினி (சாவகச்சேரி), வைரமுத்து சின்னப்பா (சாவகச்சேரி),

இலக்கிய விவரணம்,


வெற்றிவேல் சக்திவேல் (தர்மபதி,சித்தன்கேணி) (முதலாமிடம்), நாட்டார் கலை கற்றல் ஆகிய போட்டியில்.

சிரேஷ்ட பிரிவு - கவிதைப்போட்டி.

தே.காயத்திரி(யா/விக்டோரியாக் கல்லூரி சுழிபுரம்)

(116)

## கோவிந்த மலையைக் கையில் கொண்டு...



### "பொன்னாலயம்பதியில் வரதராஜப் பெருமாளாகவும் துன்னாலயம் பதியில் வல்லிபுர ஆழ்வாராகவும்"

12ஆம் உற்சவமாக மகா கம்சன் போர் நடைபெறும். கிருஸ்ண அவதாரத்தில் பூதகிவதம், சகடர் சூரன்வதம், தேவகி வசுதேவர் சிறை மீட்பு, கம்சன் வதம் போன்ற அவதாரக் காட்சிகள் பார்ப்போர் மனத்தைப் பரவசப்படுத்தும் வகையில் நாடகமாக நடித்து காண்பிக்கப்படும்.

13ஆம் உற்சவம் வேட்டைத்திருவிழா. குதிரையில் சென்று மிருகங்களை வேட்டையாடுதல் போல இறைவன் மனிதனிடம் உள்ள தீய சக்தியை அழிப்பதைக் குறிப்பது. வடக்கு வீதியிலே பந்தல் அமைத்து இவ் வேட்டை திருவிழா இடம்பெறும்.

14ஆம் உற்சவம் சப்பரத்திருவிழா. இத்திருவிழா மூன்று அடுக்கு சப்பரத்தில் எம்பெருமான் வீதிவலம் வருவார். இவ் உற்சவ காலத்தில் இலங்கையின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்கள் தம்திறமைகளைக் காட்டும் ஒருமேடையாகப் பாவிப்பர். உலக தவில்மேதை தட்சணாமூர்த்தியின் தவில், கைதடி பழனியின் தவிலோடு சங்கமித்ததும் இங்குதான்.

15ஆம் உற்சவம் தேர் உற்சவம். இத்தேரை இவ் ஆலயத்திற்கு செய்து கொடுத்தவர்கள் புலோலியைச் சேர்ந்த நாகலிங்கமும். G.G.பொன்னம்பலமும் ஆவார். இம் முத்துத் தேர் உலாவரும் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து மாயவனைத் தரிசிப்பது வழக்கம். (தொடரும்)

திரு.ச.யாதவானந்தன்
(ஆசிரியர்)

## அருள்புரிவாய் பெருமானே!

வல்லிபுரம் தனில் வந்தமர்ந்த வைகுந்தப் பெருமானே!
விழாக் கோலம் பூண்டிருக்கும் விஷ்ணுபகவானே!
உன்னருள் பெறவே ஓடி வந்தோம் நாம் இங்கு!
பஞ்சணை மெத்தையில் பள்ளிகொள்ளும் பெருமானே!
பக்தர்கள் எமக்கு அருள் புரிவாய் பெருமானே!

-நிர்மலா-
-செம்பியன்பற்று தெற்கு-

## நெடுந்தீவில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்ப்ரப்பில் தற்போதும் திங்கள், புதன், சனி ஆகிய மூன்று நாட்களிலும் இந்திய இழுவைப்படகுகள் கிரமமாக அத்துமீறித்தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதாக அப்பகுதிக் கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவைச் சுற்றி இவ்வாறு பெருமளவு இந்திய இழுவைப்படகுகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு இந்திய இழுவைப்படகுகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றபோது, தாம் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக இந்திய இழுவைப்படகுகள் அங்கிருந்து அகன்றதன் பின்பே தாம் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தனர்.

ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது பகுதிச் சிறு கடல் தொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது இந்திய இழுவைப் படகுகளினால் சிறு கடற்தொழில் உபகரணங்கள் (வலைகள்) வெட்டி விடப்பட்டிருக்கின்றன. இதனால் அவர்களுக்குப் பெருமளவு நஷ்டம் ஏற்பட்டிருந்ததாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், நெடுந்தீவுப் பகுதியில் பெருமளவு கடல் வளங்கள் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய நடவடிக்கையால் அழிந்து போயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

நான் என்ற அகந்தையைப் போக்கி விடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள் - மகாத்மா காந்தி

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## குற்றமற்ற முற்போக்குப் போராளி!

மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக என்றார் பாரதியார். மனித சமுதாயம் நாகரிக வாழ்க்கை வாழத் தொடங்கிய காலம் முதல் கண்டுவந்துள்ள பெருங் கனவு, பேதங்கள் அற்ற ஒரே மனுக்குலமும் ஒரே உலகமும் உருவாகிட வேண்டும் என்பது.

நயத்தகு நாகரிகம் கண்ட சமுதாயங்களில் எல்லாம், தத்தம் எல்லைகளைக் கடந்து உலகெலாம் தழுவும் உயர்ந்த குறிக்கோள் காலந்தோறும் எழுந்திருக்கக் காண்கிறோம். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பழந்தமிழ்க் கவிஞனும், மனுக்குலம் ஒன்று மானுடம் ஒன்று என்று பாடிய கிரேக்கப் புலவனும் அகன்று விரிந்த காட்சி உடையவராகவே இருந்தனர்.

எல்லோருக்கும் உலகம் ஒன்று, இருளும் ஒன்று ஒளியும் ஒன்று என்று பின்வந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடியதும் சமத்துவத்தின் சகோதரத்துவத்தின் இலட்சிய நிலையையே காட்டுகிறது. எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கும் எல்லோரும் அவாவுகின்ற இலட்சியமாகத் தொடர்கிறது.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று கொதித்த பாரதியின் ஆவேசம், உணவின்றி மடிவோரைக் கேள்வியுறும் ஒவ்வொரு மனிதனுக்கும் எழக்கூடியதுதான். பசிப்பிணி தீர்த்தலே தவப்பெரு நல்லறம் என்று மணிமேகலை பாடிய சீத்தலைச் சாத்தனாரும் கூறுகிறார். மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பதைப் பேரறமாக வைக்கிறது அந்த பௌத்த நெறிக் காப்பியம்.

இந்த நல்லறங்களைக் கண்டுகொள்ளாமல் விடுவதற்கு, அந்தக் குற்றவுணர்வுகளிலிருந்து தப்பிப்பதற்கு, நம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்ளும் நியாயங்களையும் நாம் உருவாக்கிக் கொள்கிறோம். உணவின்றி, தங்கக் குடிலின்றி, தொழிலின்றிக் கல்வி வாய்ப்பின்றி எல்லாம் நம் கண்முன்னே மக்கள் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறோம். அதை ஒதுக்கிவிட்டு, அந்த முனகல்கள் வெளியே கேட்காதவகையில் வேறு மேலான பிரச்சினைகளை உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாம் சொல்லும் பிரச்சினைகள் தீர்ந்தால், உங்களுக்கு உணவும் வீடும் தொழிலும் கிடைத்துவிடும் என்ற ஏமாற்றையே மாதக்கணக்காக வருடக்கணக்காக சொல்லித் தப்பித்துக் கொள்கிறோம்.

வாழ்வாதாரங்களே இன்றிக் கஷ்டப்படுபவர்கள் முன்னால் நாம் வசதிகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் குற்றவுணர்வைச் சமாளித்துக் கொள்ள நாம், எல்லோருக்கும் பொதுவான வேறு பிரச்சினைகளே பெரிதான பிரச்சினைகள் என்று ஓங்கிய குரலில் முழங்குகிறோம். உதாரணத்திற்கு, இன்னும் வீடில்லாத நீ அடுத்த மழைக்குப் படப்போகும் துன்பத்தை மறந்துவிட்டு, புத்தர் சிலைகள் பெருகுவதையும், படையினர் நிலம் பறிப்பதையும் பற்றிக் கவலைப்படு. இந்த உணர்ச்சிகரக் கோபத்தில் உன் துன்பத்தை ஆற்றிவிடலாம் என்பதை நியாயமாகக் காட்ட முற்படுகிறோம். யாருக்கு நியாயம் இது?

சமூகத்தில் நாங்களும் சேர்ந்து நமக்குக் கீழ் உள்ளவர்களுக்குச் செய்துகொண்டிருக்கும் ஒடுக்குமுறைகளை மறைப்பதற்காக, நமக்குப் பொதுவான பெரிய ஒடுக்குமுறையொன்றைத் தூக்கிப் பிடிப்பதில் உள்ள ஏமாற்றை இனி நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெண்ணை ஒடுக்குவதை, தாழ்த்தப்பட்டவனை ஒடுக்குவதை, நம்மிடையே உள்ள சிறுபான்மையினனை ஒடுக்குவதை எல்லாம் நினைத்தாலே நாம் குற்றவாளிகள் என்பது புரிந்துவிடும். இதற்குப் பதிலாக ஏகாதிபத்தியத்திற்கெதிராக ஒரு முழக்கத்தை வைப்பேனாகில், நான் குற்றமற்ற முற்போக்குப் போராளியாக எண்ணிக்கொள்ள முடிகிறது. இதுதான் நடக்கிறது.

- ஆசிரியர்

# பல ஆண்டுகளாகத் தொடர்ந்த மன்னார் கரிசல் இனமுறுகலுக்கு தீர்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் கரிசல் பகுதியில் பல ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டிருந்த இன ரீதியான முறுகல் நிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மன்னார் சர்வமதப் பேரவையும், மன்னார் பிரஜைகள் குழுவும் இணைந்து சம்பந்தப்பட்ட இரு தரப்பினரோடும் தொடர்ச்சியான சந்திப்புக்களை மேற்கொண்டதன விளைவாக கடந்த சனிக்கிழமை மாலை இந்த சுமுகமான சமாதானத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்ததாவது,

கரிசல் பகுதியைச் சேர்ந்த இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மக்கள் பல ஆண்டுகளாக மிகவும் அன்னியோன்னியமாக, சகோதரர்களாக வாழ்ந்து வந்துளளனர். ஆனால் அண்மைய ஆண்டுகளில் இந்த இரண்டு சமூகங்களுக்கிடையில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் இவர்கள் மத்தியில் இருந்துவந்த ஒற்றுமைக்கு பங்கம் விளைவிப்பதாக மாறியது. பெரிய கரிசலில் அமைந்துள்ள புனித கப்பலேந்தி மாதா ஆலய வழிபாடுகளின போது .முஸ்லிம் தரப்பைச் சார்ந்த சில இளைஞர்களால் இடையூறு விளைவிக்கப் படுவதாக கத்தோலிக்கத் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டு வந்தது. சில சந்தர்ப்பங்களில் இந்தப் பிரச்சினை பூதாகரமாக வெளிவந்த சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வேளைகளில் பாதுகாப்புத் தரப்பினர் அங்கு சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த சந்தர்ப்பங்களும் நடைபெற்றுள்ளன.

தொடர்ந்து பதட்டமும், முறுகல் நிலைமையும் நிலவிவந்தாலும் கடந்த செப்ரெம்பர் 7ஆம் திகதி குறிப்பிட்ட கத்தோலிக்க ஆலய வழிபாட்டின்போது இடையூறு விளைவிக்கப்பட்ட நிலையில் மீண்டும் இப்பிரச்சினை எழுந்தது. இந்நிலையில் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு இரண்டு சமூகத்தவர்கள் மத்தியிலும் ஒற்றுமையை, சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை மன்னார் சர்வமதப் பேரவையிடமும், மன்னார் பிரஜைகள் குழுவிடமும் முன்வைக்கப்பட்டது.

இந்த இரண்டு அமைப்புக்களும் கரிசல் பகுதி இஸ்லாமிய தரப்பினரையும், கத்தோலிக்க தரப்பினரையும் தனித்தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். தொடர்ந்து கடந்த செப்ரெம்பர் 15ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு கரிசல் பாடசாலையில் இந்த இரண்டு தரப்பினரையும் ஒன்றுகூட்டி சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொலிஸ் அதிகாரிகளும் உடன் இருக்க இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின்போது கடந்தகாலத் தவறுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றிற்காக வருத்தமும் தெரிவிக்கப்பட்டது எதிர்காலத்தில் கத்தோலிக்க ஆலய வழிபாட்டிற்கு இடையூறு ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை கரிசல் பள்ளிவாசல் நிர்வாகம் பொறுப்பேற்றுக்கொண்டது! அத்துடன் இனி வரும் காலங்களில் குழப்பத்திற்கு காரணமாக இருக்கக்கூடியவர்களை சட்டத்தின்முன் நிறுத்தும் பொறுப்பையும் பள்ளிவாசல் நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. இதேவேளை கத்தோலிக்கத் தரபபினரும் ஏற்கனவே இப்பிரச்சினையோடு தொடர்புபட்டவர்களுக்கு எதிராக போட்டிருந்த பொலிஸ் முறைப்பாடுகளை மீளப் பெற முன்வந்தனர். ஆயினும் அம்முறைப்பாடுகள் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் நீதிமன்றத்திற்கு சென்றுதான் சமாதானமாக இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். அதன்படி நீதிமன்றத்தில் தமது சமாதான முயற்சியைத் தெரிவித்து தொடர்ந்து வழக்கைத் தொடராமல் முடிவுக்குக் கொண்டுவர இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கரிசல் பள்ளிவாசல் நிர்வாகமும், கரிசல் கத்தோலிக்க ஆலய நிர்வாகமும் அடிக்கடி சந்தித்து எதிர்காலத்தில் எழக்கூடிய சிறுசிறு பிரச்சினைகளை வளரவிடாமல் உடனுக்குடன் தீர்த்துவைக்க வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

# மதுபானப் பொருட்கள் கூடியவிலையில் விற்பனை

(மன்னார்)

மன்னார் நகரில் அமைந்துள்ள மது விற்பனை நிலையத்தில் அனைத்து விதமான மதுபானப் பொருட்களும் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், கொள்வனவு செய்யப்படுகின்ற மதுப்பொருட்களுக்கான சிட்டை வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் நகரில் மதுபான விற்பனை நிலையமாக ஒரு விற்பனை நிலையமே காணப்படுகின்றது.

குறித்த விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படுகின்ற மதுபானப்பொருட்கள் அனைத்தும் மதுபானப்பொருட்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள விலையினை விட 50 ரூபாய் தொடக்கம் 100 ரூபாய் வரை அதிகூடிய விலைக்கு விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் மது வரித்திணைக்கள அதிகாரிகள் அசமந்தப்போக்குடனே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்வனவு செய்யப்படுகின்ற மதுபானப் பொருட்களுக்கு சிட்டை கேட்டால் அதனைத் தர மறுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் குறித்த விடயத்தில் செயற்பட்டு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மது பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் நீதிமன்ற தாக்குதல்; மேலும் இருவர் சரணடைவு

(மன்னார்)

மன்னார் நீதிமன்றம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் மேலும் 2 சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றில் சரணடைந்தனர். குறித்த 2 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

கடந்த யூலை மாதம் 18 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை 43 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், குறித்த 43 பேரும் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதேநேரம் மன்னார் நீதவானுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக அமைச்சர் றிசாட் பதியுதீன் மீதான வழக்கும் எதிர்வரும் 24 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பலாப்பழம் 800 ரூபா

(வரணி)

கொடிகாமம் சந்தையில் கடந்த காலங்களில் 80 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பலாப்பழம் ஒன்று தற்போது 800 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

பலாப்பழ சீசன் முடிந்துள்ள நிலையில் பிந்திக்காய்த்த பழங்களே தற்போது விற்பனை செய்யப்படுகிறது. கோயில் தேவைக்ளுக்காகவே ஆலயத்தினர் சிலர் இவ்வளவு பணம் கொடுத்து பலாப்பழத்தை வாங்கிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(150)

## வள்ளிபுனம் மக்களுக்கு இலவச நடமாடும் சேவை

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியமும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும் இணைந்து வள்ளிபுனம் உடையார்கட்டு கிழக்கு, மேற்கு, தேவிபுரம், சுதந்திரபுரம் ஆகிய கிராம மக்களுக்காக இலவச நடமாடும் சேவையொன்றை நடத்தியுள்ளன.

இந்நடமாடும் சேவையில் சட்ட ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இதில் 89 பேருக்கு தேசிய அடையாள அட்டையும், 3 பேருக்கு காலங் கடந்த பிறப்புச் சான்றிதழும், 7 பேருக்கு காலங்கடந்த இறப்பு சான்றிதழும், 17 பேருக்கு புதிதாக திருமணப்பதிவுகளும் மேற்கொள்ள்ப்பட்டன. மேலும் 150 பேருக்கு இலவசமாக முத்திரைகள், கடித உறைகள் என்பனவும் வழங்கப்பட்டது. இதில் 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் கலந்து கொண்டு பயன்பெற்றன. (04)



# புத்தர் சிரிக்கிறார்!

**வாசுதேவன்**

அணுசக்தி வரலாற்றில் Manhattan Project பற்றி சுருக்கமாகபார்க்கலாம். 20ஆம் நூற்றாண்டின் முன்பகுதியில் அணுஅறிவியல் (Atomic Science) மற்றும் துகள் பௌதிகத் துறைகள் (Particle Physics) உச்சம் அடைந்த காலகட்டம். இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் ஒவ்வொரு நாடும் அச்சத்தில் நடுங்கின. ஏனெனில் அக்காலத்தில் இருந்த பல்வேறு நாட்டைச் சேர்ந்த அனைத்து விஞ்ஞானிகளும் அணுஅறிவியல் ஆயுதம் தயாரிப்பதற்கு ஏற்றது என்று கணித்தவர்கள். ஆனால் எந்த நாடு இத்தொழிநுட்பத்தில் முன்னேறியுள்ளது என்பது எவருக்கும் சரிவர புரிபடவில்லை. குறிப்பாக நாஸி ஜேர்மனி கண்டு அனைத்து நாடுகளும் நடுங்கின. ஆக இந்தப் பின்புலத்தில்தான் மான்ஹாட்டன் திட்டத்தை பார்க்கவேண்டும். ஜேர்மனிக்கு எதிர் அணியில் ரஷ்யாவும், அமெரிக்காவும் இருந்தாலும் ஒருவருக்கொருவர் நம்பவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். ஆக அணுத்துகள் கண்டுபிடிப்பு ஐன்ஸ்டின் சூத்திரங்கள், சமன்பாடுகள் மற்றும் ஆராய்ச்சிகள் வாயிலாக அமெரிக்கா, பிரிட்டன், கனடா கூட்டு முயற்சியால் மிக ரகசியமாக மேற்சொன்ன (Manhattan Project) திட்டம் தொடங்கப்பட்டது. பல இயற்பியல் விஞ்ஞானிகள் அணுத்துகள் இயற்பியல் முன்னேற்றத்தை சரியாகக் கணித்து, இத்துறையில் மேலும் ஆய்வுபூர்வமாகப் பரிசோதனை நடத்தி அணுசக்தி ஆயுதங்களை தயாரிப்பதுதான் முக்கிய நோக்கம் என்று அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வேல்டிடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள். ரூஸ்வேல்ட், அப்போதைய பிரிட்டன் பிரதம மந்திரி சர்ச்சில் உடன் கலந்தோசித்து இத்திட்டத்தை முன்னெடுத்து செல்கிறார்கள்.

திட்ட காலம் 1942 முதல் 1946 வரை. திட்டத்தின் நோக்கம் அணுசக்தி உற்பத்தி மற்றும் அதன் வாயிலாக எப்படி அணுகுண்டு தயாரிப்பது. இத்திட்டத்திற்கு தலைவராக மேஜர் ஜெனரல் கூர்வ்ஸ் நியமிக்கப்படுகிறார். வரைவுகள்/செயற்பாடுகள் மிக மிக ரகசியமாக மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில் பங்காற்றிய முக்கிய விஞ்ஞானிகள் ஓப்பன்ஹீமர், லெஸ்லி குரூவ்ஸ், லியோ இலிசார்ட், ஃபெர்மி. திட்டத்தின் நோக்கமோ அணுசக்தி ஆயுத உற்பத்தி. அமெரிக்காவில் உள்ள முக்கிய 30 இடங்களில் இத்திட்டத்தின் பல்வேறு செயற்பாடுகளை/சோதனைகளை நடத்தி, ஆய்வு முடிவுகளை மொத்தமாக இணைத்து லொஸ் அலெமஸ் (Los Alamos) இடத்தில் மிக ரகசியமாக அணுகுண்டு தயாரிப்பதற்கான முதல் வரைவுகள் தயாரிக்கப்பட்டது. லொஸ் அலெமஸ் ரகசிய இடத்தை தேர்ந்தெடுத்தது இத்திட்டத்தில் முக்கிய பங்காற்றிய அணுசக்தி விஞ்ஞானி ஓப்பன்ஹீமர். இத்திட்டத்தில் பங்காற்றிய முக்கிய இங்கிலாந்து விஞ்ஞானிகள் நீல் போர், கிளாஸ் ஃபியுக்ஸ். இத்திட்டம் ரகசியம் என்பதால் லொஸ் அலெமஸ் இடத்தை செய்திப் பரிமாற்றத்தில் 'லு' என்று குறிப்பிட்டுள்ளார்கள். மூலப்பொருளான யுரேனியம் கொலராடாவிலிருந்து தருவித்து சோதனையை மேற்கொள்ளுகிறார்கள். 1945ஆம் வருடம் மே மாதத்தில் முதல் அணுகுண்டுப் பரிசோதனை அரங்கேறியது. (Trinity Test) அதே வருடம் சிலமாதங்கள் கழித்து வெற்றிகரமாக

ஹிரோஷிமா, நாகசாகி மேல் குண்டு போட்டு இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது. இதில் முக்கிய விடயம், இதற்கு அடிப்படையான அணு உலை, டிசம்பர் 1942-ல் இத்திட்டக் குழுவினரால், ரகசியமாக கட்டப்படுகிறது. உலகின் முதல் அணு உலையின் பெயர் Chicago Pile-1 (CP-1). இதில்தான் முதன் முறையாக அணுக் கரு தொடர்வினை (Nuclear Chain Reaction) அரங்கேறுகிறது. வெற்றிகரமான பரிசோதனையை ரூஸ்வேல்ட்டின் சங்கேத மொழியில் தந்தி அடித்து தெரியப்படுத்துகிறார்கள். அதாவது சங்கேதமாக "இத்தாலிய மாலுமி புதிய உலகிற்கு வந்துள்ளார்". இதற்கு ரூஸ்வேல்ட் "எப்படி இருக்கிறார்?" கேட்கிறார். விஞ்ஞானிகள் இதற்கு பதிலளிக்கையில் சங்கேதமாக "மிகவும் நட்புடன் நண்பராக நம்மிடம் வந்துள்ளார்". ஆக அணுசக்தி நண்பன் என்ற போர்வையில் நம்மிடையே வந்தது வரலாறு. 1954ல் ருஷ்யாவின் ஓப்னின்ஸ்க் அணு உலையில்தான் அதிகாரபூர்வமாக அணு உலை வாயிலாக மின்சாரம் தயாரிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் அரங்கேறிய மற்றொரு முக்கிய விடயம் உளவாளிகள். இத்திட்டத்தை மோப்பம் பிடித்த ருஷ்யா (அப்போதைய அதிபர் ஸ்டாலின்) பல உளவாளிகளை இத்திட்டத்தில் இறக்கியது. இதில் முக்கியமானவர்கள் மேற்சொன்ன இங்கிலாந்து விஞ்ஞானி கிளாஸ் ஃபியுக்ஸ் ஒரு ருஷ்ய உளவாளி. மற்றவர்கள் ஹாரி கோல்ட், ஜோர்ஜ் கோவல், ரோசன் பெர்க். இதனால் ரஷ்யாவும் இத்தொழிநுட்பத்தில் ஏறக்குறைய அமெரிக்காவோடு முன்னேற்றம் அடைந்தது.இல்லையெனில் ருஷ்யா சில வருடங்கள் பின் தங்கியிருக்கும். பின்னாளில் அனைவரும் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை அடைந்துள்ளார்கள். இதில் ரோசன் பெர்க் தம்பதிகள் வழக்கு பிரசித்தம். தம்பதிகள் இருவருமே உளவாளிகள் என அமெரிக்க நீதிமன்றம் ஊர்ஜிதம் அடைந்து மரண தண்டனை விதிக்கிறார்கள். அதாவது மின்சார நாற்காலியில் உட்கார வைத்து ஊயிரை பறிப்பது. பல்வேறு மனித உரிமை நிறுவனங்கள் அமெரிக்க அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள் மரணதண்டனையை ரத்து செய்ய கோரி. முக்கிய சிந்தனையாளர்கள் ழான் போல் சார்த், பாப்லோ பிக்கோஸோ அமெரிக்க அரசை எதிர்த்து அறிக்கை வெளியிடுகிறார்கள். அதாவது அணுசக்தியும் வேண்டாம், மரணதண்டனையும் வேண்டாம் என. அரசு செவிசாய்க்கவில்லை. 1953ஆம் வருடம் ஜுன் 19ம் தேதி தம்பதியருக்கு மரண தண்டனை மின்சார நாற்காலியில் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவில் முதல் அணு உலை 1969இல் தாராப்பூரில் கட்டப்படுகிறது. 1974ல் பொக்ரானில் "புத்தர் சிரிக்கிறார்" வெடித்து பரிசோதனை வெற்றிகரமாக நடத்தப்படுகிறது.

**வெற்றிகரமான பரிசோதனையை ரூஸ்வேல்ட்டின் சங்கேத மொழியில் தந்தி அடித்து தெரியப்படுத்துகிறார்கள். அதாவது சங்கேதமாக 'இத்தாலிய மாலுமி புதிய உலகிற்கு வந்துள்ளார்". இதற்கு ரூஸ்வேல்ட் 'எப்படி இருக்கிறார்?" என்று கேட்கிறார். விஞ்ஞானிகள் இதற்கு பதிலளிக்கையில் சங்கேதமாக 'மிகவும் நட்புடன் நண்பராக நம்மிடம் வந்துள்ளார்". ஆக அணுசக்தி நண்பன் என்ற போர்வையில் நம்மிடையே வந்தது வரலாறு.**

## தயாரிப்பு முறைகள்

மின்சாரம் பல முறைகளில் தயாரிக்கப்படுகிறது. காற்றின் மூலம் சுற்றச் செய்து தயாரிக்கப்படுவது காற்றாலை மின்சாரம் (Wind Power). அணையில் நீரைத் தேக்கி மேலிருந்து கீழே வரும் நீரின் விசையால் டேர்பனை (Turbine) சுழலச்செய்து ஜெனரேட்டர் மூலமாக தயாரிக்கப்படுவது நீர் மின்சாரம் (Hydel Power). நீரைக் கொதிக்க வைத்து, நீராவி வழியாக டேர்பனை (Turbine) சுழலச்செய்து தயாரிக்கப்படுவது அனல் மின்சாரம் (இதற்கு நிலக்கரி பயன்படுத்தப்படுகிறது) (Thermal Power). இவ்வாறு நீரைக் கொதிக்க வைத்து நீராவியாக்குவதற்கு நிலக்கரிக்குப் பதிலாக அணுவின் உட்கருவைப் பிளப்பதால் உருவாகும் வெப்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுவதுதான் அணு மின்சாரம் (Atomic Power). சூரிய ஒளியின் மூலம் வெப்பநிலை தூண்டப்படும் பலகைகள் வாயிலாக மின்சாரம் தயாரிக்கப்படுகிறது (Solar Power).

யுரேனியம் போன்ற சில தனிமங்கள் பிளக்கப்படுவதால் அதிக வெப்பமும் ஆற்றலும் கிடைக்கின்றன. அவற்றை முறைப்படுத்தி அதை அணுக் கருத் தொடர் வினையாக மாற்றி (Nuclear Chain Reaction) நீரைக் கொதிக்க வைத்து நீராவியாக்கி அதன் மூலம் டேர்பனைச் சுழல வைத்துப் பெறப்படுவது தான் அணு மின்சாரம்.

அனல் மின்சாரம் பாதுகாப்பானது. ஆனால் பராமரிக்கும் செலவு அதிகம். சுற்றுச்சூழல் கேடு உண்டு. ஒரு மெகாவாட் மின்சாரம் தயாரிக்க 5 கோடி ரூபா முதலீடு தேவை.

நீர்வள மின்சாரம் பாதுகாப்பானது. பராமரிக்கும் செலவு அதிகம் இல்லை. சுற்றுச்சூழல் கேடு அறவே இல்லை. ஆனால் நீர் அதிக ஆற்றலுடன் பாயும் இடத்தில் தான் இத்தொழிநுட்பத்தை நிறுவ முடியும். ஒரு மெகாவாட் மின்சாரம் தயாரிக்க 6 கோடி ரூபா முதலீடு தேவை.

காற்றாலை தொழில்நுட்பத்தில் எந்தக் கேடும் இல்லை. மிகப் பாதுகாப்பானது. ஆனால் பருவநிலை சார்ந்த தொழிநுட்பம். இதன் மூலம் ஒரு மெகாவாட் மின்சாரம் தயாரிக்க 6 கோடி தேவை.

சூரிய ஒளியின் வாயிலாக மின்சாரம். எந்தப் பிரச்சினையும் இல்லை. பராமரிக்கும் பணியும் இல்லை. ஒரு சிக்கல். இத்தொழிநுட்பத்தில் பலகைகள் (Panels) நிறுவுவதற்கு அதிக இடம் தேவை. தற்போது இத்தொழிநுட்பம் உலக அளவில் அதிக முன்னுரிமையும் முக்கியத்துவமும் பெற்றுள்ளது. இதில் தீவிரஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இதன் முதலீடு ஒரு மெகாவாட்டிற்கு 7 - 8 கோடி ரூபா தேவை.

அணு மின்சாரம் பராமரிக்கும் செலவு மிக அதிகம். அதிக ஆபத்தானது.முதலீடு ஒரு மெகாவாட்டிற்கு 9 - 10 கோடி ரூபா தேவை. ஒரு சிலர் அணுமின்சாரம் ஒரு யுனிட்டோடு மற்ற முறைகளில் தயாரிக்கப்படும் மின்சார யுனிட்டோடு ஒப்பிட்டு, அணுமின்சாரமே விலை குறைவு என்று வாதிடுகிறார்கள். எதிர்காலத்தில் அணுக்கழிவால் ஏற்படும் பாதிப்புகளையும் கணக்கில்எடுக்கவேண்டும். ஏனெனில் ஒவ்வொரு நாட்டிற்கும் இதன் வாயிலாக மின்சாரம் தயாரிப்பது என்பது இரண்டாம் பட்சம். இதன் மூலம் அணு


ஆயுத உற்பத்திக்குத்தான் முன்னுரிமை. ஆக இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்தால் அணு மின்சாரம் உற்பத்தி செலவு மிக அதிகம் மற்றும் மிக மிக ஆபத்தானது. மற்றபடி கதிர்வீச்சு, அணுக்கழிவு தீமைகள் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. இதைப்பற்றி பலர் ஆய்வு பூர்வமாக எழுதியுள்ளார்கள்.

ஆக, சூரிய ஒளி மற்றும் காற்றாலை வாயிலாக தயாரிக்கப்படும் மின்சாரத்திற்கு அதிக முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

## என்ன செய்யலாம்?

ஒவ்வொரு தனிமனிதரும் மின்சாரப் பயன்பாட்டை குறைக்கவேண்டும். மின் கடத்தல் பகிர்மானத்தில் (Transmission Loss) ஏறத்தாழ 30 சதவீதம் இழப்பு ஏற்படுகிறது. இழப்பு அரசியல் மாநாடுகள்.. கோவில் திருவிழாக்களுக்கு மின்சாரம் அதிகளவில் உபயோகிப்பதால் ஏற்படுகிறது. பள்ளிக் குழந்தைகளின் பாடத்திட்டங்களில் அணு அறிவியலின் தீமைகள்/கேடுகளையும் பற்றிச் சேர்க்க வேண்டும். பகல்/இரவு விளையாட்டுப் போட்டிகளை ரத்து செய்யவேண்டும். அரசு வழங்கும் இலவச அல்லது குறைந்த விலையில் மின்சாரம் வழங்குவதை மறுபரீசிலனை செய்யவேண்டும்.

# முரண்பாட்டுக் களமாக இலங்கையை பயன்படுத்துவதற்கு அனுமதி இல்லை



(கொழும்பு)

இந்திய - சீன முரண்பாடுகளுக்குக் களமாக இலங்கையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டு நிலமோ கடலோ வேறு நாடொன்று இன்னுமொரு நாட்டின் மீதுதாக்குதல் நடத்தவோ அல்லது மோதல்களை ஏற்படுத்திக்கொள்ளவோ பயன்படுத்த அனுமதிக்கப்படமாடடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


சீனாவுடன் இலங்கை பேணிவரும் இராணுவ மற்றும் பொருளாதார உறவுகளினால் இந்தியாவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுடனும் சிறந்த வர்த்தகஉறவுகளைப் பேணிக் கொள்ளவேண்டும் என்பதே எமது இலக்கு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றாம் தரப்பு நாடொன்றை இலக்கு வைத்து இலங்கை இராணுவ உறவுகளைப் பேணுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தின் வர்த்தக மையமாக இலங்கையை மாற்ற வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ரணில் பதவி விலகக்கோரி சத்தியாக்கிரக போராட்டம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பதவி விலகுமாறு கோரி சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக்குழு உறுப்பினர்களினால் இந்தப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் பாரியளவில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

25000 இற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் கொழும்பில் பாரிய சத்தியாக்கிரகப் போராட்டமொன்று நடத்தப்பட உள்ளதாக கட்சியின் கிளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

ரணிலும் அவரது ஆதரவாளர்களும் கட்சியின் செயற்குழுவில் அங்கம்வகிக்கும் வகையில் கட்சியை ஒருபோதும் ஐக்கியப்படுத்த முடியாது என கிளர்ச்சிக்குழு உறுப்பினர் லால்பெரேரா தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியை ரணில் விக்ரமசிங்க சீரழித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒத்திவைக்கப்பட்ட மருத்துவர் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

நான்கு மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளில் அரசாங்க மருத்துவர்கள் இன்று முதல் மேற்கொள்ளவிருந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கையை ஒத்திவைப்பதற்கு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

சப்ரகமுவ, மத்திய, வடமத்திய, மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சுமார் 80 வைத்தியசாலைகளின் மருத்துவர்கள் இன்று முதல் பகிஷ்கரிப்பு மேற்கொள்வர் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மருத்துவர்கள் மீதான தொந்தரவுகள் மற்றும் நிர்வாக பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான குழுவொன்றை சுகாதார அமைச்சு நியமித்ததையடுத்து தொழிற்சங்க நடவடிக்கையை ஒருவாரத்திற்கு ஒத்திவைப்பதற்கு மருத்துவர்கள் தீர்மானித்துள்ளனர்.

# பசுமாட்டைத் திருடி வெட்டியவருக்கு அபராதத்துடன் கூடிய சிறை விதிப்பு

பசு மாடொன்றைக் களவாடி இறைச்சிக்கு வெட்டிய ஒருவருக்கு 50,000 ரூபா தண்டத்துடன், 6 மாத சிறைத்தண்டனை வழங்கி மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

இந்நபர் 50,000 ரூபா தண்டம் செலுத்தாதுவிடின் மேலும் 6 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும் நீதவான் கூறினார்.

மன்னார், சின்னக்கரிசல் கிராமத்திலுள்ள காட்டுப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு சட்டவிரோதமாக பசு மாடொன்று இறைச்சிக்கு வெட்டப்பட்டதாக மன்னார் பொது சுகாதார பரிசோதகர்களுக்குத் தகவல் கிடைதததாகவும் இதனையடுத்து பொது பரிசோதகர்கள் அங்கு சென்றபோது சந்தேக நபர் தப்பிச் சென்றதுடன், மாடு வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது வெட்டுவதற்கு தயாராகவிருந்த மற்றுமொரு மாடும் மன்னார் பொது சுகாதார பரிசோதகர்களினால் மீட்கப்பட்டது. வயிற்றில் கன்றுடனான பசு மாடே களவாடப்பட்டு வெட்டபபட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மன்னார் பொது சுகாதார பரிசோதகர்கள் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த நிலையில், மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய பசு மாட்டை வெட்டிய நபரைக் கடந்த சனிக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

# பொதுத்துறை ஊழியர் சம்பளம் அதிகரிக்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

பொதுத்துறை ஊழியர்களின் சம்பளம் 13000 ரூபாவினால் உயர்த்தப்படவேண்டுமென முன்னாள் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், தொழிற்சங்கத் தலைவருமான கே.டி.லால்காந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட உள்ள 2013 ஆம ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தால் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் வாழ்க்கைச் செலவு 13442 ரூபாவினால் உயர்வடைந்துள்ளதாகவும், இதேயளவு சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் போது 10000 ரூபாவினால் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டுமென தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ற வகையில் சம்பளம் உயர்த்தப்படும் என தேர்தல்காலத்தில் ஜனாதிபதி அளித்த வாக்குறுதி உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை என லால்காந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

# புத்திஜீவிகளை வெளியேற்ற வெளியக சக்திகள் முயற்சி

புத்திஜீவிகளின் தேவை நாட்டிற்கு தேவைப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவது நாட்டுக்கு எதிரான சூழ்ச்சியில் ஒரு அங்கம் எனவும், அது தொடர்பாக அனைவரும் புத்திசாதுரியத்துடன் ஈடுபட வேண்டுமெனவும் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன். வெளிநாட்டு சக்திகளின் தூண்டுதல் காரணமாகவே இது போன்ற பகிஷ்கரிப்புகள இடம்பெறுகின்றன. இச்சக்திகள் எமது புத்திஜீவிகளை இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முனைகின்றன என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது. நாடடில் குழப்பங்களை ஏற்படுததி பெரும் அழிவுகளை ஏற்படுத்துவதற்கு இவர்கள் முனைகின்றனர்: எனவே அதற்கு இடமளிக்கவேண்டாம். புத்திஜீவிகள் புத்திசாலிகளாக நடந்து கொள்வதன் மூலமே இலங்கையில் தற்போதுள்ள நிலைமையை மாற்றியமைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆட்சி கை மாறினால் நாட்டுக்கு ஆபத்து

(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆட்சியை, அரசாங்கத்தைத் தவிர வேறு யாரும் கைப்பற்றுவார்களானால் அது தனி இராஜ்ஜியம் உருவாகுவதற்கு வழிவகுக்கும் என்று குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய சம்மேளனங்களின் ஒன்றியம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அதன் இணைப்பாளர் குணதாச அமரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்க தரப்பில் இனவாதம் அற்ற 15 உறுப்பினர்கள் உள்ளனர். சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த 11 பேர் உள்ளனர். ஹக்கீம் தலைமையில் 7 உறுப்பினர்கள் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சியமைத்து, 13 ஆம் திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்த கோருகின்றனர்.

அவர்களது கோரிக்கையினை நடைமுறைப்படுத்த வேண்டி வரும. ஹக்கீம் இல்லாவிட்டாலும், இந்த 15 பேரை வைத்துக் கொண்டே ஆட்சி அமைக்க முடியும். ஹக்கீமும் வேண்டாம், சம்பந்தனும் வேண்டாம். இவர்கள் கிழக்கில் ஒரு பகுதியையும், வடக்கில் ஒருபகுதியையும் எடுத்துக் கொண்டு நிர்வாகத்தை ஏற்படுத்த முயலகின்றனர். இதனை அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஒரு இலட்சம் கோழிக்குஞ்சுகள் வவுனியா பண்ணையில் உற்பத்தி

(வவுனியா)

வவுனியா கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் புந்தோட்டப் பண்ணையில் கடந்த வருடம் ஒரு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று இருபத்திமூன்று கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக வவுனியா கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.தபோதினி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொள்ளைப்புறக் கோழி இனங்களை தாம் உற்பத்தி செய்து வருவதாகவும் இதற்கான தாய் இனக் கோழிகளை பெரதெனிய பிரதேசத்தில் இருந்து கொள்வனவு செய்து அதன் மூலமாக தாம் இப்போது கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்வதாகத் தெரிவித்த அவர், இவ்வாறான குஞ்சுகளை மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு அரச திட்டங்களின் மூலம் விநியோகித்து வருவதாகவும் ஏனைய குஞ்சுகளை கால்நடை வைத்திய அலுவலகங்களின் ஊடாக ஒரு குஞ்சு 80 ரூபா வீதம் விற்பதாகவும் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் தாம் குறைந்தளவிலான உற்பத்தியை மேற்கொண்டபோதிலும், தற்போது மக்களின் தேவை கருதி அதேயளவான மனித வலுவுடன் நாளாந்தம் 7500 குஞ்சுகளை உறபத்தி செய்வதுடன் அவற்றை மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போனற பிரதேசங்களுக்கு விநியோகிப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் 93 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பித்த இப்பண்ணையின் கோழிக்குஞ்சு உற்பத்தியானது 2009 ஆம் ஆண்டுகளில் 56,460 குஞ்சுகளையும் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னரான காலப்பகுதியில் அதன் உற்பத்தியை இரட்டிப்பாக்கி 2010 ஆம் ஆண்டு 102, 714 குஞ்சுகளையும் 2011 ஆம் ஆண்டு 116,223 குஞ்சுகளையும் உற்பத்தி செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு பிரதேசத்தில் கோழிக்குஞ்சுக்கான உற்பத்தி நிலையங்கள் தற்போது நிறுவபபட்டுள்ளமையினால அவர்களின் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 20 ஆம் திகதியிலிருந்து வவுனியா பண்ணையிலும் உற்பத்தியைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# பெயர் மாற்றம்

இரத்மலானை விமான நிலையத்திற்கு 'கொழும்பு நகர விமான நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இலங்கைக்கு வரும் சிறிய வர்த்தக விமானங்கள் தரையிறங்குவதற்கும் இவ்விமான நிலையம் பயன்படுத்தப்படவுள்ளது.

ஆரம்பத்தில், சிறிய ரக வர்த்தக விமானங்களுக்கு இவ்விமான நிலையத்தில் சேவையளிக்கப்படும் எனவும் பின்னர் நடுத்தர அளவிலான விமானங்களுக்கும் சேவை விஸ்தரிக்கப்படும் எனவும் விமர்ன நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## வேணாவில் கிராம மக்கள்

# சொந்த இடத்தில் மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள புதுக் குடியிருப்பு மேற்கு வேணாவில் கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்களில 202 குடும்பங்களைச் சேர்ந்த 687 பேர் நேற்று சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளர்.

வவுனியா - செட்டிகுளத்தில் உள்ள கதிர்காமர் நலன்புரி முகாமில் தங்கியிருந்த 88 குடும்பங்களைச் சேர்ந்த 300 பேரும் ஆனந்தகுமார சுவாமி நலன்புரி முகாமில் தங்கியிருந்த 114 குடும்பங்களைச் சேர்ந்த 387 பேரும் சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 14 பேருந்துகளில் அழைத்து வரப்பட்டுள்ளதுடன், அவர்களது உடமைகள் 11 பேருந்துகளில் எடுத்துவரப்பட்டு இவர்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டனர்.

பின்னர் குடும்பப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய், 3 வேளை சமைத்த உணவு, மற்றும் உணவுப் பொருட்கள் என்பன ஐ.ஓ.எம். நிறுவனத்தின் உதவியின் கீழ் வழங்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (04)

## காலாவதியான பொருட்களை விற்ற 26 வர்த்தகர்களுக்கு தண்டம்

காலாவதியான பொருட்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு தண்டப் பணமாக 2 இலட்சத்து 46 ஆயிரம் ரூபா நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி என். சிவசீலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது 26 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இவர்களில், 12 வர்த்தகர்கள் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டப் பணம் யாழ்.நீதிமன்றத்தினாலும், 14 வர்த்தகர்கள் தலா 9,000 ரூபா வீதம் 1 இலட்சத்து 26 ஆயிரம் ரூபா தண்டப் பணம் பருத்தித்துறை நீதிமன்றத்தினாலும் அறவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# விநாயகர் சதுர்த்தி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - விளைவேலி அருள்மிகு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த விநாயக சதுர்த்தி விழா இன்று காலை 10.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஶ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் சதுர்த்தி விழா நடைபெறும்.

காலை நவகும்ப அபிஷேகம் இடம்பெற்று அலங்கார, அர்ச்சனைகள் இடம்பெறும். தொடர்ந்து எம்பெருமான் திருவீதியுலா நடைபெறவுள்ளது. இச் சதுர்த்தி விழாவின் இறுதியில் அடியவர்களுக்கு அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மாதந்தோறும் சதுர்த்தி விழா இவ்வாலயத்தில் இடம்பெறுகின்றமை சிறப்பம்சமாகும்.

## கிளினிக் சேவை

(வரணி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் உளநலப் பிரிவு கிளினிக் சேவையில் பாடசாலை மாணவர்களுக்கு சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 12 மணி வரை சிகிச்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏனைய உளநலம் மனநலம் பாதித்தவர்களுக்கான கிளினிக் வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய இரண்டு நாட்களும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (150)

# அனர்த்த பாதுகாப்புக் கல்வி வினா - விடைப் போட்டி

(அச்சுவேலி)

பாடசாலை மாணவர்களின் அனர்த்தப் பாதுகாப்பு கல்வி தொடர்பான அறிவை மேலும் மேம்படுத்தும் முகமாக ஜீ.ஐ.சற், ஈ.எஸ்.சி. நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் இடைநிலைப் பிரிவில் பயின்று வரும் அனைத்து மாணவர்களும் பங்குபற்றும் வகையில் அனர்த்த பாதுகாப்பு கல்வி தொடர்பான வினா - விடைப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

முதலாம் பிரிவு , இரண்டாம் பிரிவு , மூன்றாம் பிரிவு என மூன்று பிரிவுகளில் நடைபெற உள்ள இப் போட்டிகள் பாடசாலை மட்டம் , கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் என்ற ரீதியில் இடம்பெறவுள்ளதுடன், இப்போட்டிகள் யாவும் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படவுள்ளதால், மாணவர்கள் தமக்குரிய மொழி மூலத்தில் பங்குபற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளின் போது தரம் 6,7 மாணவர்கள் முதலாம் பிரிவிலும், தரம் 8, 9 மாணவர்கள் இரண்டாம் பிரிவிலும், தரம் 10, 11 மாணவர்கள் மூன்றாம் பிரிவிலும் உள்ளடக்கப்பட்டு, போட்டிகள் முதலில் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவில் இருந்தும் தலா ஐந்து மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் கோட்ட மட்டப்போட்டிகளுக்கு உள்வாங்கப்படுவர்.

கோட்ட மட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்படுவோர் பின்னர் வலய மற்றும் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும். இறுதியாக ஒவ்வொரு பிரிவிலும் வெற்றியீட்டிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளிற்காக பாடசாலை மட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கமைய யாழ். வலயத்தில் உள்ள அனைத்து கோட்ட பாடசாலைகளுக்கும் இடையிலான கோட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (03)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்

தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 20.09.2012


- கூட்டமைப்பின் வெற்றிக்குள் புதைந்திருக்கும் வீழ்ச்சிக்கான விதைகள்
- கிழக்கில் தொடரும் இழுபறி நனவாகிய கனவு நீடிக்குமா?
- உடைந்து போகும் மலையகக் கூட்டமைப்பு
- சலுகை அரசியலும் கொள்கைக் கொலைகளும்
- பிளேக் அடித்த எச்சரிக்கை மணி






உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் இதுதான் தினமுரசு



# இந்திய அணி கிண்ணம் வெல்லும்


ருவென்ரி-20 உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப் பற்றிக் கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என அவ்வணியின் பயிற்சியாளர் பிளட்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தியா - பாகிஸ்தான் அணிகள் பயிற்சி ஆட்டத்தில் அடைந்த தோல்வி குறித்து அதிகம் க்தைக்க நாம் விரும்பவில்லை. இதில் பந்துவீச்சாளர்களின் தெரிவு சரிவர அமையவில்லை என்றே கருதுகின்றேன். இலங்கை அணிக்கு எதிராக முதல் பயிற்சி ஆட்டத்தில் எங்களுக்கு நல்ல வெற்றி கிடைத்தது. இலங்கை சூழ்நிலை இந்தியாவுக்கு சாதகமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இதனை உரியமுறையில் பயன்படுத்திக் கொள்வதெனில் பந்து வீச்சாளர்களில் இரண்டு பேர் சிறப்பான முறையில் செயற்படவேண்டும். துடுப்பாட்டத்தில் வலுவான வரிசை இருப்பது மகிழ்ச்சி. இந்திய அணி கிண்ணத்தை வெல்லும் என நான் முழுமையாக நம்புகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

ICC WORLD TWENTY20
SRI LANKA 2012

அவுஸ்ரேலியா-அயர்லாந்து
கொழும்பு மாலை 3.30 மணி

இந்தியா-ஆப்கானிஸ்தான்
கொழும்பு இரவு 7.30 மணி



# முடிவுக்கு வந்துள்ள ஆட்டத்திறன் கவலை

(கொழும்பு)

கடந்த சில வாரங்களாக எனது ஆட்டத்திறன் குறித்து சிறிது கவலை காணப்பட்டது. இந்தியாவிற்கெதிரான பயிற்சிப் போட்டியின் மூலம் அந்தக் கவலை முடிவுக்கு வந்தவேளை, சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது என பாகிஸ்தான் சகலதுறை வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்கள் எனக்கு மோசமான வாரங்களாக அமைந்தது. எனினும் உலக ருவென்ரி-20 தொடரில் என்னால் மிகச்சிறப்பாகச் செயற்பட முடியும்.

அனைத்து சிரேஷ்ட வீரர்களும் இவ்வாறான மோசமான நிலையில் மாட்டிக் கொள்வது வழமையே. அதுபோலவே நானும் இவ்வாறு சிக்கித்தவித்தேன்.

இந்திய அணிக்கெதிரான பயிற்சிப் போட்டி எனது ஆட்டத்திறனை மேலும் வலுப்பெறச் செய்துள்ளது. உலகக் கிண்ண ருவென்ரி -20 போட்டியில் சாதிக்கக்கூடிய ஆற்றலை பெற்றுவிட்டதாகவே நான் உணர்கின்றேன்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அக்மலில் ஆட்டம் சிறப்பாக இருந்தது. அவரின் வருகை பாகிஸ்தான் அணிக்குப் பலமாக அமைந்திருப்பதாகவே நான் உணர்கின்றேன். ருவென்ரி -20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் கிண்ணம் வென்ற அனுபவம் எமக்கும் உள்ளது என்பதால் இந்த முறையில் கிண்ணம் வெல்ல இறுதி வரைபோராடுவோம். சமபலம் கொண்ட அணியாக பாகிஸ்தான் திகழ்கின்றமை விசேட அம்சம். அத்துடன் இலங்கையில் இடம்பெறுவதால் ஆசிய அணிகளுக்கிடையில் பெரும் போட்டி நிகழும் என்பதில் ஐயமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச ரென்னிஸ் தரவரிசை பெடரர், அசரெங்கா முதலிடம்

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய ரென்னிஸ் தரப்படுத்தலில் ஆண்கள் பிரிவில் சுவிற்சர்லாந்தின் ரொஜர் பெடரர், பெண்கள் பிரிவில் பெலாரசின் விக்டோரியா அசரெங்கா தொடர்ந்தும் முத லிடத்தில் காணப்படுகின்றனர். ஆண்கள் பிரிவில் நொவக் ஜோகோவிச் இரண்டாமிடத்திலும், அன்டி முர்ரே மூன்றாமிடத்திலும், ரபேல் நடால் நான்காமிடத்திலும் காணப்படுகின்றனர். பெண்கள் பிரிவில் அண்மையில் ஐக்கிய அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் சம்பியன் பட்டத்தை வெற்றிகொண்ட ஐக்கிய அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் தொடர்ந்தும் 4ஆம் இடத்திலேயே காணப்படுகிறார்.

வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல் முடிவுகள்:

ஆண்கள்: ரொஜர் பெடரர், ஜோகோவிச், அன்டி முர்ரே, ரபேல் நடால், டேவிட் பெரர், தோமஸ் பேர்டிச், ஜோ வில்பிரட் சொங்கா, ஜுவன் மார்ட்டின் டெல் பொட்ரோ, ஜங்கோ ரிப்சரவிக், ஜோக் இஸ்னர்,

பெண்கள்: விக்டோரியா அசரெங்கா, மரியா ஷரபோவா, அக்னியஸ்கா ரட்வன்ஸ்கா, செரீனயா வில்லியம்ஸ், பெட்ரா குவிற்றோவா, அன்ஜெலிக் கேர்பர், சாரா எரானி, லீ நா, சமந்தா சொற்சொர், மரியன் பார்ட்டோரி,



# தடையை எதிர்த்து வழக்கு

இந்திய ரென்னிஸ் சங்கம்விதித்துள்ளதடையை எதிர்த்து வழக்குத் தொடர ரென்னிஸ் வீரர் மகேஷ் பூபதி முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. மகேஷ் பூபதி, ரோஹன் போபண்ணா ஆகியோர் 2014 ஜூன் வரை இந்திய அணிக்குத் தேர்வு செய்யப்பட மாட்டார்கள் என்று அகில இந்திய டென்னிஸ் சங்கம் (ஏ.ஐ.டி.ஏ.) தெரிவித்தது. ரென்னிஸ் சங்கம் வலியுறுத்திய நிலையிலும் ஒலிம்பிக் போட்டியில் லியாண்டர் பயஸுடன் சேர்ந்து விளையாட மாட்டோம் என்று இவர்கள் இருவரும் மறுத்ததே இந்தத் தடைக்குக் காரணம்.இந்நிலையில் மும்பையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பூபதி இது தொடர்பாகக் கூறியது: இந்தியாவுக்காக போபண்ணா 10 ஆண்டுகள் வரை ரென்னிஸ் விளையாடியுள்ளார். நான் 18 ஆண்டுகளாக நாட்டுக்காகப் போட்டிகளில் பங்கேற்று வருகிறேன்.

இந்நிலையில் எங்களுக்கு எதிராக மிகக் கடுமையாக ரென்னிஸ் சங்கம் நடந்து கொண்டுள்ளது. இது ஏற்புடையதே அல்ல. எனவே இது தொடர்பாக எனது தரப்பில் என்னநடவடிக்கைஎடுப்பது என்பது குறித்து,முக்கியமாக சட்ட ரீதியாக இந்த விடயத்தை அணுகுவது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகிறேன் எனத் தெரிவித்தார்.

# ரொட்டென்ஹெம் இலகு வெற்றி

இங்கிலாந்து பிறிமியர் லீக் கால்பந்துத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் ரொட்டென்ஹெம் ஹொட்ஸ்பர்ஸ் கழகமானது ரெடிங் கழகத்தை இலகுவாக வெற்றிகொண்டது. இப்போட்டியில் ரொட்டென்ஹம் ஹொடஸ்பர்ஸ் கழகம் 3-1 என்ற கணக்கில் இலகுவாக வெற்றிகொண்டது.

போட்டி ஆரம்பித்து 18ஆவது நிமிடத்தில் ரொட்டென்ஹம் கழகத்தின் ஜேர்மெய்ன்டிஃபோ போட்டியின் முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். அதன் பின்னர் இரு கழகங்களும் கோல்களைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தபோதிலும் முதற்பாதியில் மேலதிக கோல்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கோலின் பின்னர் தடுத்தாடிய ரெடிங் கழகம் மேலதிக கோல்கள் அடிக்கப்படாதவாறு காத்து ஆடியது. ஆனால் போட்டியின் 71ஆவது நிமிடத்தில் ரொட்டென்ஹம் கழகத்தின் சார்பில் கரத் பெய்ல் அக்கழகத்தின் இரண்டாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

கரத் பெய்ல் கோல் பெற்றுக் கொடுத்து 3 நிமிடங்களில், போட்டியின் 74ஆவது நிமிடத்தில் ஜேர்மெய்ன் டிஃபோ தனது இரண்டாவது கோலைப் பெற்றுக்கொள்ள ரொட்டென்ஹம் கழகம் 3-0 என்ற முதன்மையைப் பெற்றுக் கொண்டது.

போட்டியின் இறுதி நிமிடத்தில் ரெடிங் கழகத்தின் சார்பில் ஹல் ரொப்சன் ஹனு கோலொன்றைப் பெற்றுக் கொடுத்த போதிலும் அது தோல்வியின் அளவைக் குறைக்க முடிந்ததே தவிர போட்டியில் தாக்கத்தைப் பெற்றுக் கொடுக்க முடிந்திருக்கவில்லை. ரொட்டென்ஹம் கழகத்தின் முகாமையாளராக அன்ட்ரே வில்லாஸ்போகஸ் இன் கீழ் ரொட்டென்ஹம் கழகம் பெற்றுக்கொண்ட முதலாவது இங்கிலாந்து பிறீமியர் லீக் வெற்றியாக இது அமைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய அணிக்கே கிண்ணம்

இலங்கையில் ஆரம்பிக்கவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடரினை ஆசியாவைச் சேர்ந்த அணிகளுள் ஒன்றே கைப்பற்றும் என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

உலக ருவென்ரி-20 தொடர் கடுமையான போட்டித்தன்மை கொண்ட தொடராக அமையவுள்ளது. இத்தொடரில் பங்குபற்றுகின்ற அணிகளில் பல அணிகள் சரியான ஆரம்பத்தைப் பெற்றால் தொடரை வெற்றி கொள்ளும் வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது.

இப்போட்டிகள் இலங்கையில் இடம்பெறவுள்ளதால், இங்குள்ள ஆடுகள நிலைமைகள், காலநிலைகள் ஆகியன ஆசிய அணிகளுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கும். எனவே ஆசிய அணிகளுள் ஒன்று உலக ருவென்ரி-20 தொடரை வெற்றி கொள்வதற்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுகிறது. இம்முறை உலக ருவென்ரி-20 தொடருக்கான வெற்றியாளர் இலங்கையாகவோ, இந்தியாவாகவோ அல்லது பாகிஸ்தானனகவோ அமைவதற்கு வாய்ப்புள்ளது. இம்மூன்று அணிகளும் பலமான ருவென்ரி-20 அணிகளைக் கொண்டுள்ளன. முதலில் துடுப்பெடுத்தாடி மிகச் சிறப்பான ஓட்டமொன்றைப் பெற்றால் இவ் அணிகளைத் தோற்கடிப்பது கடினமாக அமையும் எனவும் தெரிவித்தார்.

# தற்போதைக்கு இல்லை ஓய்வு



(சென்னை)

ஓய்வுக்கான எண்ணமே இல்லை என்று சதுரங்க உலக சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்துள்ளார்.


சதுரங்கப் போட்டியில் முடிசூடா மன்னனாக விஸ்வநாதன் ஆனந்த் (வயது-42) திகழ்கிறார். 5 முறை உலக சம்பியன் பட்டம் வென்றுள்ளார். ஆனால், உலக தர வரிசையில் இருக்கும் பல வீரர்கள் மிக குறைந்த வயதில் இருப்பதால், விஸ்வநாதன் ஆனந்தின் ஓய்வு குறித்தும் பேச்சுக்கள் அடிபட ஆரம்பித்துள்ளன.

உலக செஸ் கூட்டமைப்பு சமீபத்தில் வெளியிட்டுள்ள தர வரிசைப் பட்டியலில், நோர்வே வீரர் மேக்னஸ் கார்ல்சன் (வயது-21) முதலிடத்தில் உள்ளார். இவர் விஸ்வநாதன் ஆனந்தின் வயதில் பாதியில்தான் உள்ளார். இந்த தர வரிசை பட்டியலில் ஆனந்துக்கு சற்று நெருக்கமான வயது கொண்டவர், உக்ரைன் வீரர் வாஸ்சிலி இவான்சுக் மட்டுமே. இந்நிலையில், சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட விஸ்வநாதன் ஆனந்திடம் சதுரங்கப் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவீர்களா என்று கேட்டதற்கு அவர் அளித்த பதில்:

ஓய்வுக்கான எண்ணமே இப்போதைக்கு இல்லை. நான் எப்படி ஓய்வு பெற முடியும்? 2014ஆம் ஆண்டில் நடக்கவுள்ள உலக சம்பியன் போட்டியில், என்னுடைய பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய இப்போதைய இலட்சியம். சதுரங்கப் போட்டியில் தொடர்ந்து என்னால் நீடிக்க முடிவதற்கு காரணம், இந்த போட்டியின் புதிய நுணுக்கங்களை கற்றறிய தொடர்ந்து காட்டி வரும் ஆர்வம்தான் என்று நினைக்கிறேன் என்றார்.

விளையாட்டுச் செய்திகள்

# டொனால்ட் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி.



(யாழ்ப்பாணம்)

டொனால்ட் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொக்குவில் கே.சி.சி.சி. 'ஏ' அணி தகுதிபெற்றுள்ளது.

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் டொனால்ட் வெற்றிக் கிண்ண ஒரு நாள் தொடரின் அரையிறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


இதில் யாழ். பல்கலைக்கழக அணியும், கொக்குவில் கே.சி.சி.சி. 'ஏ' அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். பல்கலைக்கழக அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி கிருபவன், ராகுலன், உத்தமக்குமரன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருபவன் 38, ராகுலன் 34, உத்தமக்குமரன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயரூபன் 31 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், கிருபாலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 198 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். பல்கலைக்கழக அணி செல்ரன், விதுஷ் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் சிறந்த அடித்தளத்தை இட்டபோதும் கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் தோல்வியடைந்தது. இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணி 49 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் செல்ரன் 43, விதுஷ் 45 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்காகப் போராடினார்கள். பந்து வீச்சில் ஜெயதாஸ் நான்கு, சிலோஜன் மூன்று, கிருபவன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஜெயதாஸ் தெரிவானார்.

(எஸ்.பி.)

## உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிப்பின் பேரில் நல்லூர் மூத்தவிநாயகர் இளைஞர் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள்வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ளஅமைச்சரின் அலுவலகத்திற்கு கடந்த 14ஆம் திகதி இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேற்படி விளையாட்டுக் கழகத்தினர் விளையாட்டு உபகரணங்களை தந்துதவுமாறு அமைச்சரிடம் கோரிக்கையினை முன்வைத்தனர்.

விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் முகமாக ஒருதொகுதி விளையாட்டுஉபகரணங்கள் வழங்கப்பட்டன. இவற்றை அமைச்சரின் முன்னிலையில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின்(உதயன்),ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர் வழங்கி வைத்தனர்.

## டெக்கான் சார்ஜர்ஸ் நீக்கம்

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் அணிகளுள் ஒன்றாக டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவெடுத்துள்ளது. அவ்வணியை உரிமைப்படுத்தியுள்ள டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனத்தின் நிதிப் பிரச்சினைகள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடியில் டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனம் சிக்கித் தவித்து வந்த நிலையில் அண்மையில்கருத்துத்தெரிவித்த அந்நிறுவனத்தின் அதிகாரி, தங்களது நிறுவனத்தின் நிதி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக டெக்கான் சார்ஜர்ஸ் அணியை விற்பனை செய்யப்போவதாக அறிவித்திருந்தரர். 900 இந்திய கோடி ரூபாக்கள் பெறுதியான அந்தக் கோரிக்கையை விடுத்த நிறுவனத்தை டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனம் நிராகரித்திருந்தது. அதனை அடுத்து நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது.

இதனை அடுத்து சென்னையில் ஒன்றுகூடிய இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உயர் மட்டக்குழு, ஒப்பந்த விதிகளை மீறியமைக்காக டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனத்திற்கு உரிமையான டெக்கான் சார்ஜர்ஸ் அணியை தொடரிலிருந்து நீக்குவதாக அறிவித்திருந்தது.



**வடமாகாணப்பாடசாலைமாணவர்களுக்கிடையேகல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி முதலாமிடத்தைப் பிடித்துக்கொண்டது. கடந்த 2006ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை வடமாகாணத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி தொடர்ச்சியாக முதலிடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கல்லூரி அதிபர் என். தெய்வேந்திரராஜா, பிரதி அதிபர் கே. அருளானந்தம், அணிப் பொறுப்பாசிரியர், விளையாட்டுப் பயிற்றுநர் ஆகியோருடன் முதலிடம்பிடித்த வீரர்கள் நிற்பதைக்காணலாம். (01)**

# நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவெண்ரி 20 கிரிக்கெட் ரி.சி.சி. ஜொனியன்ஸ், கிறாஸ் ஹொப்பர் வெற்றி

(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவெண்ரி -20 கிரிக்கெட் தொடரின் லீக் சுற்றில் திருநெல்வேலி ரி.சி.சி. ஜொனியன்ஸ், கிறாஸ் ஹொப்பர்ஸ் அணிகள் வெற்றி பெற்றன.

நந்தகோகுலன் மற்றும் றீகன் நினைவாக நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் யாழ். முன்னணி கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவெண்ரி-20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறுதினங்களில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை மூன்று லீக் போட்டிகள் நடைபெற்றன. இதில் முதலாவது போட்டியில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணிக்கும், திருநெல்வேலி ரி.சி.சி. அணிக்கும் இடையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி வை. எம்.எச்.ஏ. அணி 20 ஓவர்கள்நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிசாந்தன் 29, ராசேந்திரன் 25, சுபாஸ் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோபி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய திருநெல்வேலி ரி.சி.சி. அணி 19.3 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரவிந்தன் 25, லவன் 38, சிவராஜ் 23 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக சிவராஜ் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் ஜொனியன்ஸ் அணியும், ஸ்ரான்லி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அன்புஜன் 55, விதுஷன் 45, காண்டீபன் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுரேஷ், குணதாஸ், வினோஜன், உதயா தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 214 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்றநிலையில் களமிறங்கிய ஸ்ரான்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் சுதர்சன் 90, ரஜனிகாந் 23, செல்வராஜ் 13, கண்ணதாசன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன், விதுஷன் தலா மூன்று, லவேந்திரா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக விதுஷன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் கிறாஸ் ஹொப்பர்ஸ் அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிறாஸ் ஹொப்பர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களைஇழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனார்த்தனன், உமாதரன் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் ரவி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 98 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ் ஹொப்பர்ஸ் அணி 18.3 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் காந்தன் 35, பிரவாதன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சஞ்சீவன், மணிவண்ணன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டித் தொடர் 'ஏ', 'பி', 'சி', 'டி' என நான்கு குழுவாக லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் புள்ளிகள் அடிப்படையில் அடுத்த சுற்றுக்கு அணிகள் தெரிவாகும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி., 17, 42)



வடக்கும் கிழக்கும் பிரிந்திருக்கின்றது என்ற காரணத்திற்காக சென்ற முறை கிழக்கு மாகாண தேர்தலை பகிஷ்கரித்த கூட்டமைப்பினர், எதுவித வெட்கம் மானம் ரோசம் இன்றி வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் பிரிந்தே இருக்கும் நிலையில், கிழக்கு தேர்தலில் பங்குபற்றியுள்ளனர்.

# மக்களின் அழிவில் பிழைப்பு நடத்துவதை கூட்டமைப்பினர் கைவிடவேண்டும்!

- பொன் வாதவூரன் -

இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரை வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகவே இருந்து வந்துள்ளது. வடக்கும் கிழக்கும் இணைந்த ஓர் அலகாக இருக்க வேண்டுமென்பது தமிழ் மக்களின் அபிலாஷையாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னரே வடக்கும் கிழக்கும் ஓர் அலகாக உருவானது. இவ்விணைப்பானது தற்காலிகமானது எனினும், ஏறத்தாழ இரு தசாப்தங்களாக இணைந்தே இருந்துள்ளது.

தமிழ்த் தலைமையானது தொலை நோக்குள்ளதாக இருந்திருந்தால், தமிழ்மக்களின் அபிலாஷைகள்மீது உண்மையான அக்கறை உள்ளதாக இருந்திருந்தால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அன்று ஏற்று அதைப் பலப்படுத்தி இருக்கவேண்டும்.

ஆனால், தமிழ்த் தலைமை அவ்வாறு செயற்படவில்லை. தொலைநோக்கற்ற சுயநலவாத தலைமை இந்த அரிய சந்தர்ப்பத்தை குழப்பியடித்தது. ஏதோ மாகாண சபைக்கு அதிகாரம் போதாது என்பதற்காக அல்ல. அப்படி என்றால் இப்ப மட்டும் என்னவாம்? ஒரு காலத்திலே மாவட்ட சபையையே ஏற்றிருந்தவர்கள்தான் இந்த கொள்கைக் குன்றங்கள். ஒரே ஒரு கொள்கையில்தான் இவர்கள் அன்றும் இன்றும் உறுதியாக உள்ளனர். அதாவது தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடக்கூடாது. தீர்ந்துவிட்டால், தமிழர் பிரச்சினையை வைத்து நாடாளுமன்றம் செல்லமுடியாது என்ற சுயநலம் தான் காரணம், வேறொன்றுமில்லை.

சரி வடக்கும் கிழக்கும்தான் ஒன்றாக இல்லையே என்ற கவலையை விடுவோம். அன்று இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்று அதை சரிவரப் பயன்படுத்தி இருந்தால், அன்றிலிருந்து மே மாதம் 2009 வரை பலியான ஆயிரக்கணக்கான எமது மக்களின் உயிர்களைப் பாதுகாத்திருக்க முடிந்திருக்கும். ஆனால் மக்களின் நலனில் அக்கறையற்ற தொலை நோக்கற்ற இந்தத் தமிழ்த் தலைமை அதைச் செய்யவில்லை. வடக்கும் கிழக்கும் ஏதோ ஒரு காலத்தில் ஒன்றாக வரக்கூடும். இழந்த எமது பொருள் பண்டங்களை மீண்டும் பெறுக்கொள்ளலாம். ஆனால் இழந்த உயிர்களை இந்தத் தலைமைகளால் மீண்டும் பெற்றுக்கொடுக்க முடியுமா?

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலிருந்து மே மாதம் 2009 வரையிலான மக்களின் அழிவிற்கு இந்தத் தமிழ்த் தலைமையே பொறுப்பேற்க வேண்டும். மக்களைக் கொல்லக்கொடுத்த பின்னர் மக்களின் அழிவில் அரசியல் நடத்துவது கேடுகெட்ட பொறுக்கித்தனமாகும்.

"உலகம் பார்க்கிறது" என்று '77 இல் கூறியவர்கள், இந்தத் தேர்தலில் "சர்வதேசம் எம்மை உன்னிப்பாக கவனிக்கிறது", "தமிழ் மக்கள் எமது ஒற்றுமையை உலகுக்கு காட்ட வேண்டும்", "மகிந்த அரசுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்" என்றெல்லாம் வீரமுழக்கம் செய்தார்கள். அப்பாவி மக்கள் முன்னர் போல இல்லை என்றாலும் ஓரளவிற்கு வாக்கு போட்டார்கள். 77 இல் பதினெட்டுப் பேரை எமது மக்கள் அனுப்பினார்கள். 2004 இல் கள்ளவாக்குகள் மூலம் 22 பேர் தெரிவானார்கள். மக்கள் இவர்களை நம்பினார்கள் நடந்தது என்ன? இவர்கள் தங்களை நம்பிய மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுத்தார்கள்? உரிமையைப் பெற்றுக்கொடுத்தார்களா? இல்லை. எமது பிரதேசத்தை அபிவிருத்தி நோக்கி முன்னேற்றினார்களா? இல்லை. இவர்கள் பெற்றுக் கொடுத்ததெல்லாம் கண்ணீர், கம்பலை, பொருளிழப்பு, உயிரிழப்பு, இடப்பெயர்வு... இதுதான் இவர்களது சாதனை. இவர்களை நம்பிய மக்களுக்கு இவர்கள் பெற்றுக்கொடுத்தது இவைகள்தான். இனிவருங்காலத்திலாவது தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வருகின்ற சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் வரலாறு இவர்களை என்றைக்கும் மன்னிக்காது.

(சலசலப்பு)




## குழந்தைகளுக்கு

**A FOR APPLE என்று கற்றுக் கொடுப்பது பழைய முறை. இதோ புதிய முறை:**

- **A** - ஆப்பிள்
- **B** - புளூ டூத்
- **C** - சாட்டிங்
- **D** - டவுன்லோட்
- **E** - ஈ மெயில்
- **F** - பேஸ்புக்
- **G** - கூகுள்
- **H** - எச்.பி
- **I** - இண்டர்நெட்
- **J** - ஜாவா
- **K** - கிங்ஃபிஷர்
- **L** - லப்டொப்
- **M** - மெசஞ்ஜர்
- **N** - நீரோ
- **O** - ஓர்குட்
- **P** - பிகாசா
- **Q** - குயிக் டைம்
- **R** - ராம்
- **S** - ஸ்கைப்
- **T** - ட்விட்டர்
- **U** - யு.எஸ்.பி
- **V** - விஸ்டா
- **W** - வை-ஃபை
- **X** - ஷெரொக்ஸ்
- **Y** - யூ டியூப்
- **Z** - ஸோபியா

# இஸ்ரேல் - ஈரான் போர் மூளுமா?


இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், 1960களின் ஆரம்பத்தில் சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கு மிக அருகில் கியூபா நாட்டில் (1959இல் அங்கு அமெரிக்க சார்பு சர்வாதிகாரி பட்டிஸ்டா அரசை ஃபிடல் கஸ்ட்ரோ, சேகுவேரா தலைமையிலான புரட்சிப்படைகள் தூக்கியெறிந்த பின்னணியில்) ஏவுகணைகளை நிறுத்தியபோது, இன்னொரு உலக யுத்தம் மூளுமோ என்ற அச்சம் உலகம் முழுவதும் நிலவியது. அதன் பின்னர் ஆங்காங்கு வியட்நாம் யுத்தம் உட்படப் பல யுத்தங்கள் நிகழ்ந்தாலும், பாரிய போர்களுக்கு அவை இட்டுச் செல்லவில்லை. ஆனால் தற்போது இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை, அந்தப் பிராந்தியத்தில் வல்லரசுகள் சம்பந்தப்படும் பாரிய யுத்தம் ஒன்றுக்கு வழிவகுக்கலாம் என, உலகின் பல முன்னணி அரசியல் - இராணுவ ஆய்வாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது என, அதன் பரம வைரி நாடான இஸ்ரேலும் அதன் மேற்கத்தியக் கூட்டாளிகளும் குற்றம்சாட்டி வருகின்றன. தான் அணுகுண்டு தயாரிக்கவில்லை எனவும், மின்சாரம் போன்ற தேவைகளுக்கே தனது அணு சக்தியைப் பயன்படுத்தப்போவதாகவும், ஈரான் திரும்பத்திரும்பக் கூறி வந்தாலும், அதை இஸ்ரேலும் அதன் கூட்டாளிகளும் நம்பத் தயாராக இல்லை.

ஈரான் அணுகுண்டு ஒன்றைத் தயாரித்துவிடுவதற்கு முன்னதாக, அதன் அணுசக்தி நிலையங்களை விரைந்து தாக்கி அழிப்பதற்கு இஸ்ரேல் தயாராகி வருவதாக செய்திகள் கசிந்தவண்ணம் உள்ளன. இஸ்ரேலிய அரசும் அதை மறுக்காது ஆமோதிப்பது போல நடந்து கொள்கிறது. அவ்வாறான ஒரு நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபடுமானால், ஈரானும் தன்னிடம் உள்ள நீண்டதூரம் பாயும் அதிநவீன ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலைத் தாக்கும். அவ்வாறு தாக்கும்போது, அது சனச்செறிவான இஸ்ரேலிய நகரங்களையே குறி வைத்துத் தாக்கும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அப்படியான ஒரு சூழலில் பல்லாயிரக்கணக்கான இஸ்ரேலிய மக்கள் இறந்து போவதற்கு வாய்ப்புண்டு.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவும், பாதுகாப்பு அமைச்சர் எகுட் பராக்கும், ஈரானின் அணுசக்திப் பேராசை இஸ்ரேலின் இருப்புக்கே சவாலாக அமையப்போகின்றது எனத் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து, ஈரான் மீதான தமது தாக்குதல் திட்டத்தை நியாயப்படுத்தி வருகின்றனர். ஈராக்கினதும் சிரியாவினதும் அணுசக்தி திட்டங்கள் இஸ்ரேலுக்கு பாரிய அச்சுறுத்தல் எனச் சொல்லி சில வருடங்களுக்கு முன்னர் அது தாக்குதல் நடத்தியதை வைத்துப் பார்க்கையில், ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியங்கள் அதிகம் இருப்பதாகவே தோன்றுகிறது. அத்துடன் இஸ்ரேல் தாக்கினால் அதற்குப் பதிலடியாக ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தும் என எதிர்பார்ப்பதால், அதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக இஸ்ரேலிய மக்களுக்குப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இஸ்ரேலிய அரசாங்கத்தின் இந்த உத்தேசத் தாக்குதல் திட்டத்துக்கு அதன் அமைச்சரவையிலும், பொதுமக்கள் மத்தியிலும் கணிசமான எதிர்ப்புகளும் இருக்கின்றன. அவ்வாறான ஒரு தாக்குதல் இஸ்ரேலிய மக்களுக்குத் தேவையில்லாத அழிவுகளைக் கொண்டு வரும் என இஸ்ரேலிய அரச எதிர்ப்பாளர்களும், பொதுமக்களும் அஞ்சுகிறார்கள்.




மிக அண்மைக்காலமாக இஸ்ரேலில் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், கல்வி - சுகாதார வசதிகள் பற்றாக்குறை, வீடில்லாமை என்பனவற்றை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். எனவே ஈரானுடனான மோதலில் இஸ்ரேலிய அரசாங்கம் வழமையாகக் கையாளும் யூத தேசிய வாதம் பொதுமக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் எடுபடும் என்ற கேள்வியும் இருக்கின்றது.

இஸ்ரேல் மேற்கத்திய நட்பு நாடுகளின் ஆதரவுடன் ஈரானைத் தாக்குமாக இருந்தால், மேற்கு நாடுகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்காக, ஈரான் தனது கடல் பகுதியிலுள்ள ஹோமுஸ் நீரிணை ஊடான பிரதான கப்பல் போக்குவரத்து மார்க்கத்தைத் தடை செய்யக்கூடும். அவ்வாறு தடை செய்தால், இந்த வழி ஊடாக நடைபெற்று வரும் உலகின் 20 வீதமான எண்ணெய் ஏற்றுமதி முடங்கிப்போக வாய்ப்புள்ளது. அத்துடன் ஈரானின் ஆதரவுடன் இரகசியமாகப் பல நாடுகளில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பு ஈரானுக்காகப் பல நாடுகளில் தாக்குதல்களையும் நடத்தக்கூடும். அண்மையில் கிழக்கு ஐரோப்பிய நாடான பல்கேரியாவில் இஸ்ரேலிய உல்லாசப் பயணிகள் பேருந்து ஒன்றைத் தாக்கிப் பலரைக் கொலை செய்தது இந்த ஹிஸ்புல்லா அமைப்பே எனக் கருதப்படுகிறது.

அமெரிக்காவின் ஒபாமா நிர்வாகமும், கனடா உட்படப் பல ஐரோப்பிய நாடுகளும், இஸ்ரேல் அரசு ஈரான்மீது உடனடியாகத் தாக்குதல் நடத்துவதை விரும்பவில்லை. பொருளாதாரத் தடைகள் மூலமும், இராஜதந்திர முயற்சிகள் மூலமும் ஈரானை வழிக்குக் கொண்டு வருவதில் இன்னும் அதிய முயற்சிகளைக் கைக்கொள்ள வேண்டும் என அவை கருதுகின்றன. அதிலும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைப் பொறுத்தவரையில், அவர் தனது இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலை விரைவில் எதிர்நோக்கவிருப்பதால், இஸ்ரேல், ஈரான்மீது வலிந்து தாக்குதல் நடத்தினால், அது அவருக்கு ஒரு விஷப்பரீட்சையாக அமையக்கூடும்.

ஈரானைப் பொறுத்த வரையிலும் கூட யுத்தம் ஒன்றுக்கான பரிபூரண தயாரிப்பு நிலையில் அது இருப்பதாகக் கூறிவிட முடியாது. அது ஈராக்குடன் நடத்திய பல வருடப் போருக்குப்பின்னர், அதன் புரட்சிக் காவலர் படை இன்னமும் பலவீனமடைந்த நிலையிலேயே இருக்கின்றது. அத்துடன் அதன் மிக நெருங்கிய நட்பு நாடான சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மேற்கத்தைய சக்திகளின் ஆதரவுடன், ஜனாதிபதி ஆசாத்தின் ஆட்சியை ஈடாட்டம் கொள்ள வைத்துள்ளதால், ஈரானைப் பொறுத்தவரை அதுவும் ஒரு எதிர்மறை நிலைமையே.

சர்வதேச சட்டங்களைப் பொறுத்தவரை, ஒரு நாடு அணு ஆயுத உற்பத்தி அபிலாசைகளைக் கொண்டிருக்கின்றது என்ற ஒரே காரணத்துக்காக, அந்த நாட்டின்மீது வலிந்து போர் தொடுப்பதோ அல்லது இராணுவ நடவடிக்கை எடுப்பதோ சட்ட பூர்வமற்றதாகும். அப்படிப் பார்த்தால், இஸ்ரேல் வலிந்த தாக்குதல் ஒன்றை ஈரான்மீது தொடுக்குமாக இருந்தால், சர்வதேச சமூகத்தால் அது கண்டிக்கப்படக்கூடிய வாய்ப்பு நிறையவே உண்டு.

(வானவில் - 20)

# அதிகாரம், ஆணவம் வேண்டாம்!

பாண்டவர்கள் வனவாசத்தின் போது, ஒரு சமயம் வேட்டையாடச் சென்றான் பீமன். அநேக மிருகங்களை வேட்டையாடினான். அந்தச் சந்தோஷத்தில், ஆடிப் பாடி குதித்தான். அவனுடைய சப்தத்தையும், ஆரவாரத்தையும் கேட்ட பல சர்ப்பங்கள், ஓடி ஒளிந்து கொண்டன. அவன் வந்து கொண்டிருந்த போது, ஒரு குகையில் பிரமாண்டமான பாம்பு ஒன்று படுத்துக் கொண்டிருப்பதை கண்டான். உடனே அந்த பாம்பு, அவனை கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. மகா பலசாலியான பீமன், எவ்வளவோ முயற்சி செய்தும், அதனிடமிருந்து விடுபட முடியவில்லை.

அந்தப் பாம்பின் வலிமையை கண்ட பீமன், "எதற்காக என்னைப் பிடித்தாய். நான் பாண்டவர்களில் ஒருவனான பீமசேனன். என்னை இப்படி கட்டக்கூடிய நீ, யார்? வர பலத்தினாலோ, தபோ பலத்தினாலோ இப்படி என்னை கட்டியிருக்கிறாயா? எதனால் என்று சொ்ல்?" என்றான்.

அவனது கைகளை விட்டு விட்டு, உடலைச் சுற்றிய பாம்பு, "நான், நகுஷன் என்ற ராஜரிஷியாக இருந்தவன். அகத்தியரின் சாபத்தால், இப்படி பாம்பாக மாறி, பல வருஷங்களாக இங்கே கிடக்கிறேன். ராஜரிஷியாக இருந்த நான், சாபத்தினால் சர்ப்பமாகி, இங்கு பசியோடு கிடக்கிறேன். மகா பலசாலியான உன்னை நான் இப்போது சாப்பிடப் போகிறேன். விதி எப்படி எல்லாம் வேலை செய்கிறது பார்த்தாயா?" என்றது அந்துப் பாம்பு.

மேலும், "நான் கேட்கும் கேள்விகளுக்கு, எவன் சரியான பதில் கூறுவானோ, அவனால் உனக்கு சாப நிவர்த்தி உண்டாகும்..." என்று அகத்திய மாமுனி கூறியதாக சொன்னது பாம்பு.

சகோதரனான, பீமனை நெடுநேரமாக காணாததால் கவலைப்பட்டார் யுதிஷ்டிரர். அர்ஜுனனை கூப்பிட்டு, "நீ மற்றவர்களுக்குக் காவலாக இரு. நான் பீமனைத் தேடி வருகிறேன்..." என்று புறப்பட்டார். காட்டில் ஒரு குகை வாயிலில், ஒரு மலைப் பாம்பால் பீமன் கட்டப்பட்டு நிற்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

நடந்த விஷயத்தைச் சொல்லி, "இது நகுஷன் என்ற ராஜரிஷி. அகத்தியரின் சாபத்தால் இப்படி மலைப் பாம்பாக விழுந்து கிடக்கிறது..." என்றான் பீமன். சர்ப்பமும், "நான் கேட்கும் கேள்விகளுக்கு, நீ பதில் சொன்னால், இவனை விட்டு விடுகிறேன்..." என்றது, யுதிஷ்டிரரும் சம்மதித்தார். நகுஷன் பல கேள்விகளை கேட்க, இவரும் பதில்



கூறி வந்தார். அதேபோல் யுதிஷ்டிரரும், நகுஷனிடம் பல கேள்விகளைக் கேட்க, பதில் கூறினான் நகுஷன்.

பிறகு, நகுஷனை பார்த்து, "எந்த செயலைச் செய்து, மனிதன் இப்போதுள்ளதை விட, உயர்ந்த கதியை அடைகிறான்?" என்றார் யுதிஷ்டிரர். அதற்கு நகுஷன், "தானம் செய்வது, இனிமையாகப் பேசுவது, உண்மையே பேசுவது, அகிம்சையில் பற்றுதல், ஜீவ இம்சை செய்யாதிருத்தல் ஆகிய குணங்களால் மனிதன் சொர்க்கத்தை அடைகிறான்..." என்றது.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், அதிகாரம், ஆணவம் இவையெல்லாம் மனிதனுக்கு நல்லது செய்வதை விட, கெடுதல் தான் செய்கிறது. இதை உணர்ந்து, பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

# கூத்தமைப்பின் குத்தாட்டம்!

சதாசிவம் கட்டுரையிலிருந்து.

"மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்று டக்ளஸ் சொல்வதை சம்பந்தர் கொஞ்சம் மாற்றி மத்தியில் கூத்து மாநிலத்தில் "சுயசம்பாத்தியம்" என்பதை நிரூபிக்க பகீரதப்பிரயத்தனம் செய்கிறார்.

இலங்கையில் ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கங்கள் சிறுபான்மைத் தமிழர்களுக்கு இழைத்த அநீதிகள் எவ்வாறு கறைபடிந்த வரலாறுகளோ அதுபோலல்லாமல் ஆட்சிபீடம் ஏறாத, அதிகாரபலம் பெறாத தமிழ்த் தலைமைகள் முஸ்லிம் சிறுபான்மை இனத்துக்கு செய்த அநீதிகள் கறைபடிந்த வரலாறுகளே!

ஓரிரு சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் நிர்ப்பந்தங்களின் காரணமாகவோ என்னவோ தமிழர் தரப்பிடம் பேசியிருக்கின்றன. முழுமையான அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வற்கு தயக்கம் காட்டியபோதும் சில அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முன்வந்திருக்கின்றன. குறைபாடுகள் இருந்தபோதும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் தமிழர் என்கிற பெரும்பான்மை இனம் முஸ்லிம் சிறுபான்மை இனத்துக்கு எந்தவொரு நன்மைகளையும் பகிராது கொடுமைகளையும் துன்பங்களையும் அள்ளிக் கொடுத்திருக்கிறது. காத்தான்குடி பள்ளிவாசல் படிக்கட்டுக்கள் இன்றும் அதன் ஆறாச்சோகத்தைச் சொல்லும். வடக்கிலிருந்து இரண்டு மணித்தியாலத்துக்குள் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் கண்ணீர்த் துளிகளுக்கு இன்றும் எங்களிடம் விடை இல்லை. ஆனால் மாகாணசபைத் தேர்தலின் பின்னர் "ஐயோ ஆடு நனைகிறதே"

மாகாண சபையில் உப்பில்லை, புளியில்லை என்று நொட்டை சொல்லிக்கொண்டு திரிந்த கூத்தமைப்பு இறுதியாக நடந்த கிழக்கு மாகாணசபை தேர்தலில் குதிக்க காரணம் என்ன? கிடைத்த ஆசனங்களை வைத்துக்கொண்டு ஆட்சி, ஆட்சி என்று துடிப்பதற்குக் காரணம் என்ன? அப்போ முன்னைய ஆட்சியில் என்னவோ நடந்திருக்கிறது? கிழக்கு மாகாண மக்களுக்கு என்னவோ கிடைத்திருக்கிறது? அல்லது பிள்ளையான் என்ற புலிப்போராளி சிவநேசதுரை சந்திரகாந்தனாக கிழக்கு மாகாண மக்களின் மனங்களை வெற்றிகொண்டது எப்படி?

எனவேதான் கிழக்கு மாகாணசபை ஆட்சியை கையகப்படுத்துவதற்கு இரா. சம்பந்தன் தலைமையிலான கூத்தமைப்பு கூத்தாடுகிறது. உண்மையில் முஸ்லிம் காங்கிரஸ்தான் ஆட்சி அமைப்பதற்கு கூத்தமைப்பை அழைத்திருக்க வேண்டும். அல்லது முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைப்பதற்கு எமது முழுமையான நிபந்தனையற்ற ஆதரவு உண்டு என்று சம்பந்தன் ஐயா அறிவித்திருக்க வேண்டும். இதிலிருந்து தெரிகிறது கூத்தமைப்பின் சூட்சுமம்!


எது? எப்படியோ? முஸ்லிம் காங்கிரஸும் அரசாங்க சார்பு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைக்குமாக இருந்தால் "வடை போச்சே" என்று சொல்வதைத்தவிர, சம்பந்தனுக்கு வேறு வழியில்லை. முஸ்லிம் காங்கிரஸுடனோ அல்லது அரசாங்கத்துடனோ சேர்ந்து கூத்தமைப்பு ஆட்சி அமைக்குமாக இருந்தால் கோழிப் பண்ணைக்குள்ள நரி உள்ளுட்ட கதைதான்.

# வேலி தாண்டாத தமிழ் எழுத்தாளர்கள்

- சாரு நிவேதிதா -

தமிழில் எழுதுகிற ஒவ்வொரு எழுத்தாளரின் பயோடேட்டாவைப் பார்த்தால் ஒரு விஷயம் புலப்படும். அவர்களுடைய நாவல் மலையாளம், தெலுங்கு, வங்காளம், இந்தி போன்ற இந்திய மொழிகள் தவிர செக், ரஷ்யன், ஆங்கிலம், ஸ்பானிஷ், யிட்டிஷ், ஃப்ரெஞ்ச் போன்ற பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அப்போதுதான் நமக்கே "இந்தப் புத்தகம் இவ்வளவு மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறதா?" என்றே தெரிய வருகிறது. ஆனால் இத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் என்ன பயன்? மிலன் குந்தேரா செக் நாட்டுக்காரர். அவருடைய பெயர் தமிழ்நாட்டில் மிகவும் பிரசித்தம். இவ்வளவுக்கும் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டவர் அல்ல. ஆனால் அவருடைய எழுத்து தமிழ்ச் சிறுபத்திரிகைகளில் பெரிதும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. செக் மொழியில் பல தமிழ் எழுத்தாளர்கள் மொழிபெயர்க் கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களின் பெயர் கூட தேசத்தவருக்குத் தெரியாது. அவ்வளவு ஏன்? இந்தி எழுத் தாளர் நிர்மல் வர்மா இந்தியில் எழுதியவர்தான். அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்பினால் அவருடைய பெயர் இன்று உலக அளவில் தெரிய வந்திருக்கிறது. ஆனால் ஒரு தமிழ் எழுத்தாளனின் பெயர் இந்தியில் தெரியுமா? ஒருவர் பெயர் கூடத் தெரியாது என்பதுதான் நிலவரம். இப்படி ஒவ்வொரு தேசமாக எடுத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து யோசியுங்கள். நான் அந்தந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நாவலாசிரியர்களைப் பற்றி







மட்டுமே பேசுகிறேன். சில தமிழ் எழுத்தாளர்களின் நாவல்கள் ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கே ரஷ்யாவில் ஒருவருக்குக் கூட ரஷ்யனில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நாவல் பற்றி எதுவும் தெரியவில்லை. சில தமிழ் எழுத்தாளர்களின் நாவல் ஜேர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் ஜேர்மன் மொழியில் எத்தனை பேருக்கு அந்தத் தமிழ் நாவல் பற்றித் தெரியும்? இவ்வளவுக்கும் ஜெர்மனைச் சேர்ந்த ஹேர்மன் ஹேஸ்ஸேயைத் தெரியாத தமிழ் வாசகர் இருக்க முடியாது.

இதேபோல் இடாலோ கால்வினோவின் நாவல்கள் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. கால்வினோவின் பெயரும் தமிழில் மிகப் பிரசித்தம். ஆனால் இத்தாலிக் காரர்களுக்கு ஒரு தமிழ் எழுத்தாளர் பெயர் கூடத் தெரியாது. இவ்வளவுக்கும் தமிழில் வாசிப்பாளர்கள் மிகவும் கம்மி. அந்த விஷயத்தில் ஐரோப்பியர்களோடு தமிழர்கள் போட்டி போடவே முடியாது.

இப்படி நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். நமக்கு மட்டும் பிற நாட்டு எழுத்தாளர்களைப் பற்றித் தெரிகிறது. ஆனால் தமிழ் எழுத்தாளர்கள் சென்னையை விட்டுத் தாண்டவே இல்லையே ஏன்? மொழிபெயர்ப்பில் வெளியே சென்ற இவர்களுடைய நாவல்கள் எல்லாம் யாராலும் வாசிக்கப்படாமல் பல்கலைக்கழக அலுமாரிகளில் பதுங்கிக் கிடப்பது ஏன்?

இரண்டு காரணங்கள். ஒன்று, சப்பையான புத்தகங்கள்தான் மொழிபெயர்க் கப்படுகின்றன. (ஆனால் அசோகமித்திரன் பெயர் கூடத் தெரியவில்லையே? காரணம் புரியவில்லை) இரண்டு, மொழிபெயர்ப்பு மொக்கையாக இருக்கிறது அல்லது மிகக் கேவலமாக இருக்கிறது. சமீபத்தில் சுந்தர ராமசாமி எழுதிய ஒரு புளியமரத்தின் கதை என்ற நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்தேன். மோசமான மொழிபெயர்ப்பு அல்ல ஆனால் மிகத் தட்டையான மொழிபெயர்ப்பு. ஒரு ஆங்கிலப் பேராசிரியரின் நடை. வாஸ்தவத்திலேயே மொழிபெயர்ப்பாளர் ஆங்கிலப் பேராசிரியர்தான். பேராசிரியர்களிடமிருந்து இலக்கியத்தைக் காப்பாற்றுங்கள் என்று வாழ்நாளெல்லாம் சொல்லிக் கொண்டிருந்த சுந்தர ராமசாமிக்குக் கடைசியில் ஒரு பேராசிரியப் பெருந்தகைதான் ஆங்கில மொழிபெயர்ப்புக்குக் கிடைத்திருக்கிறார்.

நாவலின் ஆரம்பத்தைப் பாருங்கள்.

"முச்சந்தியில் நின்று கொண்டிருந்தது புளியமரம். முன்னால் சிமிண்டு ரஸ்தா. இந்த ரஸ்தா தென் திசையில் பன்னிரண்டு மைல் சென்றதும், குமரித் துறையில் நீராட இறங்கி விடுகிறது. வட திசையில் திருவனந்தபுரம் என்ன, பம்பாய் என்ன, இமயம் வரை கூட விரிகிறது."

இது அந்த நாவலின் ஆரம்ப வரிகள்.

இப்போது ஆங்கில மொழிபெயர்ப்பு:

The tamarind tree stood at a crossroads. The cement road in front of it went due south to land's end where three seas meet. The road to the north went to Trivandrum, and possibly as far as Bombay, perhaps even to the Himalayas.

எங்கே மொழிபெயர்ப்பு படுத்து விட்டது என்று புரிகிறதா? சுந்தர ராமசாமியின் மொழியில் லேசான ஒரு கிண்டல் இழையோடும். அது ஆங்கிலத்தில் காணாமல் போய் விட்டது. இந்த ரஸ்தா தென் திசையில் பன்னிரண்டு மைல் சென்றதும், குமரித் துறையில் நீராட இறங்கி விடுகிறது. "குமரித் துறையில் நீராட இறங்கி விடுகிறது" என்ற பிரயோகம் ஆங்கிலத்தில் இல்லை. நாவல் முழுக்கவே தட்டையான மொழிபெயர்ப்பு. இப்படி இருந்தால் எப்படித் தமிழ் இலக்கியம் வெளியே அறிமுகம் ஆகும்?

# கற்பு என்றால் என்ன?

**- இந்திரா பார்த்தசாரதி**

அற்ப விஷயங்களையும் அரசியலாக்கும் அரசியல்வாதிகளின் வாயில் அகப்பட்டு, மிகவும் அவதியுற்ற சொல், "கற்பு". "கற்பு" என்றால்என்ன? "கல்" என்ற வேர்ச்சொல்லினின்றும் பிறந்தவை "கற்பு", "கல்வி" போன்ற சொற்கள். "கல்" என்றால், "தோண்டுதல்". ஆங்கிலச் சொல், "culti-vate", "culture" போன்ற சொற்களும் இந்தத் "தோண்டுதலை" ("உழுதல்"- லத்தீன் - cultivatus) அடிப்படையாகக் கொண்டு பிறந்த சொற்கள்தாம்.

கற்பிக்கப்படுவது எதுவோ அது "கற்பு". கல்வியினால் உண்டாகும் ஞானமும் "கற்பு"தான்.

> **பெண்ணைக் கண்டு ஆண் அஞ்சுகிறான். அவளுடைய சக்திக்கு எல்லையில்லை என்ற பயம். அவளை அடக்கி ஆளுதல்தான் தனக்குத் தற்காப்பு என்று நினைக்கின்றான். இயற்கையைப் பெண்ணாக பாவிக்கும் மனிதன், அவளைக் கண்டு அஞ்சிய நிலையில், சுற்றுப்புறச் சூழலை அழிப்பதன் மூலம், அவளைக் கற்பழிப்பதாக நினைத்துத் தன் ஆளுமையை யும் ஆக்கிரமிப்பையும் உணர்த்துகிறான்.**

பெரிய திருமொழியில், "கற்பு" என்ற சொல் "பெரிய ஞானம்" என்ற பொருளில் ஆளப்பட்டிருக்கிறது.

"ஆழி ஏந்திகையனை,
அந்தணர் கற்பினை கழுநீர்
மலரும் வயல் கண்ணமங்கையுள்
கண்டு கொண்டேனே". "அந்தணர்
கற்பு" என்றால் "சான்றோர்
ஞானம்" என்று பொருள்.
அகத்திணை ஒழுக்கத்தில்
"களவு"க்குப் பிறகு, "கற்பு".
"களவு" என்றால் என்ன?
தொல்காப்பியம் கூறுகிறது"
இன்பமும் பொருளும் அறனும்
என்றாங்கு அன்பொடு புணர்ந்த
ஐந்திணை மருங்கின் காமக்
கூட்டம் காணுங்காலை மறையோர்
தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த்
துணைமையோர் இயல்பே"

இன்பமும், பொருளும், அறனுமென்று கூறப்பட்ட மூவகைப் பொருள்களுள், முதன்முதல் சந்திக்கும், திருமணம் ஆகாத இளம் ஆண், பெண் ஆகிய இருவரிடையே தோன்றும் அன்பின் விளைவாக ஏற்படும் இன்பத்தின் பகுதியாகிய புணர்தல் முதலிய ஐவகைப்பட்ட ஒழுக்கம். "காமக் கூட்டம்" என்பது, "புணர்தலை"க் குறிக்கும்.

வேதத்துள் குறிப்பிடப்பட்டுள்ள எட்டுவகை மணங்களுள், "களவு", "கந்தர்வத" திருமணமாகும் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. "கந்தருவ குமரரும் கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்தது போலத் தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது," என்கிறார் நச்சினார்க்கினியர். சகுந்தலையும் துஷ்யந்தனும் வனத்தில் சந்தித்துப் புணர்ந்தது கந்தர்வம்.


கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும் ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாதென்றற்குத் "துறையமை" என்றார் என்று மேலும் கூறுகிறார் நச்சினார்க்கினியர்.

"கற்பின்றி" என்றால் என்ன பொருள்? "கற்பு" என்றால் திருமணம். மக்களைப் பொருத்த வரையில், களவொழுக்கம் பயிலுகின்ற தலைவனும் தலைவியும் திருமணம் செய்துகொண்டாக வேண்டும். கந்தருவர்களுக்கு இந்தச் சட்டம் கிடையாது. அதே சமயத்தில், திருமணத்துக்கு முன்பு, களவொழுக்கத்தில் இருக்கும் தலைவனும் தலைவியும் புணர்தல் குறித்துச் சமூகத் தடை ஏதுமில்லை.

"கற்பெனப்படுவது கரணமொடு புணரக் கொளற்குரிய மரபிற் கிழவன் கிழத்தியைக் கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுமே" தலைவன், தலைவி ஆகிய இருவருடைய பெற்றோர்கள், இருவருக்கும் களவுக்குப் பிறகு, இருவருடைய உறவையும் உறுதிப்படுத்த நிகழ்த்தும் சடங்கே "கற்பு" எனப்படும். "கற்பியல்" என்று தொல்காப்பியத்தில் வரும் பகுதியில், திருமணத்துக்குப் பிறகு, தலைவன், தலைவி, தோழி, போன் றோர் எந்தெந்தச் சூழ்நிலையில் பேசுவார்கள் என்ற செய்திகள் அனைத்தையும் நாடகக் காட்சிகள் போல் சித்திரித்துக் கூறப்படுகின்றன.

"கற்பியலில்", ஊடல் பற்றியும் (கணவனுடைய பரத்தையர் தொடர்பின் காரணமாக அவனுக்கும் அவன் மனைவிக்குமிடையே உணடாகும் பூசல்கள்), கணவன் பொருள் தேடவோ அல்லது உயர்கல்வி படிப்பதற்கோ அல்லது அரசு காரியமாகவோ மனைவியிடமிருந்து பிரிந்தால் அப்பிரிவு பற்றியும், பிரிந்திருக்கும் காலத்தில் மனைவியின பொறுமை காத்து இருத்தல் பற்றியும் பேசப் படும். புணர்ச்சியைப் பற்றிய செய்தி "கற்பியலில்", நினைவு கூர்தலாகக் கூறப்படுமேயன்றி, நிகழும் செயலாகச் சித்திரிக்கப்படவில்லை. அதாவது, திரு மணத்துக்கு (கற்புக்கு) அடிப்படையான, தலைவன் - தலைவிக்கிடையே நிகழும் புணர்ச்சி திருமணத் துக்கு (கற்பு) முந்திய ஒழுக்கமாகிய "களவிலேயே" கூறப்பட்டுவிடுகிறது என்பது பொருள்.


. தொடக்கக் காலத்தில், ஓர் ஆணும் பெண்ணும் திருமணமாகி ஒருவரை யொருவர் புரிந்து கொண்டு, இல்லறம் என்ற நல்லறம் பயிலுதலைச் கூற வந்த "கற்பு" என்ற சொல், பிற்காலத்தில், பெண்ணைச் சார்த்தியே பேசப்பட்டு, அவளுடைய பதிவிரதா தன்மையும், "பொறுமை யும்" (முல்லைத்திணை ஒழுக்கமாகிய "இருத்தல்" என்ற பண்பு) குறிக்க வந்த சொல்லாக மாறிவிட்டது. இதற்கு என்ன காரணம்?



பெண்ணைக் கண்டு ஆண் -அஞ்சுகிறான். அவளுடைய சக்திக்கு எல்லையில்லை என்ற பயம். அவளை அடக்கி ஆளுதல்தான் தனக்குத் தற்காபபு என்று நினைக்கின்றான். "இயற்கையைப் பெண்ணாக பாவிக்கும் மனிதன், அவளைக் கண்டு அஞ்சிய நிலையில், சுற்றுப் புறச் சூழலை அழிப்பதின் மூலம், அவளைக் கற்பழிப்பதாக நினைத்துத் தன் ஆளுமையையும் ஆக் கிரமிப்பையும் உணர்த்து கிறான்" என்கிறார் காபரா. ஆணின் பெண்ணைப் பற்றிய அடிமன அச்சந் தான் துர்க்கையின் உரு வகம்.


அவளுடைய சீற்றம் அடங்கிய நிலையில், ஆணின் ஆளுமைக்குட்பட்ட நிலையில், உமாவாகி, சாந்தத் தின் உறைவிடமாகத் திகழ்கிறாள். இந்தியா வில் பெண்களுடைய "தீட்டு" பற்றிய சிந்தனையும் அச்ச உணர்வின் அடிபடையில் உருவானதுதான் என்று சில மேல்நாட்டு அறிஞர்கள் கருதுகிறார்கள். தமிழில், "அணங்கு" என்ற சொல், "பேயை" யும், "பெண்" ணையும் குறிக் கினறது என்பது சிந்தித்தற்குரி யது. ஆகவே, பெண்ணைக் கண்டு அஞ்சும் ஆண், அவளுக்குக் "கற்பு" என்ற பொன் விலங்கைப் பூட்டி யிருக்கிறான் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அவளை "பத்தினி"யாக்கி அடக்குவதாகும்.

அநியாயத்தைப் பொறுக்கமுடியாத சீற்றத்தில், மதுரையை எரித்த கண்ணகி, தன் நாட்டு எல்லைப்புறத்துக்கு வந்து சொர்க்கம் எய்தினாள் என்று கேட்டு, அவள் சீற்றம் இன்னும் எஞ்சியிருக்குமோ என்று அஞ்சி, அவளை "பத்தினிக் கடவுளாக்கி" அவள் சினததைத் தணிக்க முயல்கிறான் சேரன் செங்குட்டுவன். பெண்க ளுடைய "கற்பு"ப் பற்றிய விவாதத்தை முதலில் தொடங்கி வைத்தவன், சேரன் செங்குட்டுவன். சாத் தனாரிடமிருந்து கண்ணகி வரலாற்றைக் கேட்டபின், தன கணவன் உயிர் நீத்தவுடன் அவனைத் தொடர்ந்து உயிர்நீத்த பாண்டிய மாதேவி, கோவலன் கொலலப்பட்டவுடன் அவனைத் தொடராமல், வழக்காடி வெனற பிறகு அவனோடு சொர்க்கம் புகுந்த கண்ணகி ஆகிய இருவரில் யார் சிறந்தவர் என்று தன் மனைவியை வினவி, இக்காலப் பட்டிமன்ற வீரர்களுக்கு முன்னோடி யாக விளங்குகிறான்! இக்காலப் பட்டிமன்ற வீரர்களும் அவனை ஏமாற்றிவிடவில்லை.



"அறக்கற்பு", "மறக்கற்பு" போன்ற சொற்களை வீசிச் சொற்சிலம்பம் ஆடி வருகின்றனர். "பொய் யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்கிறார் தொல்காப்பியர். களவொழுக்கத்தில், பொய்யும், குற்றமும் ஏற்படத் தொடங்கிய பிறகு, குடும்ப மூத்தவர்கள் திருமணச் சடங்குக்குத் தான் முன்னுரிமை தந்தார்கள் என்பது இதன் கருத்து. "பொய்", "வழு" என்று குறிப்பிடப்படுபவை யாவை? "பொய்யாவது செய்த ஒன்றனைச் செய்திலேன் என்றல் வழுவாவது சொல்லுதலே அன்றி ஒழுக்கத்து இழுக்கி ஒழுகல்" என்று உரை எழுதுகிறார் நச்சினார்க்கினியர்.

திருமணச் சடங்குக்கு நச்சினார்க்கினியர் மேற்கோளாகக் காட்டியிருக்கும் அகச்செய்யுள்,



வாயில் மறுத்த தோழிக்குத் தலைவன் கூறுவதாக மருதத் திணையில் வருகின்றது. பரத்தையரிடமிருந்து வருகின்ற தலைவனை வீட்டுக்குள் அனுமதிக்கத் தோழி மறுப்பதுதுதான் "வாயில் மறுத்தலா"கும். தலைவி ஊடலைச் சொல்வதுதான் மருதத்திணை. வாயில் மறுக்கப்பட்ட தலைவன், தனக்கும் தலைவிக்கும் நடந்த திருமணச் சடங்கை நினைவு கூர்ந்து தோழியிடம் சொல்லுகிறான்.

ஆகவே இதுவும் திருமணச் சடங்கை விளக்குவதற்காக அமைந்த பாடல் என்றும் கூறமுடியாது. "களவொ"ழுக்கத்துக்குப் பிறகு, தலைவனும் தலைவியும் பெற்றோர்கள் சம்மதத்துடன் ஒன்று கூடி வாழும் தோழமையைத்தான் "கற்பு" என்று கருதினார்களோ என்று நினைக்க இடமிருக்கிறது. சடங்கு கூட இங்கு அவ்வளவு முக்கியமாகத் தெரியவில்லை. கற்பு நிலையாக, தலைவன் தலைவிக்குமிடையே தோழமைதான் (companion-ship) வற்புறுத்திப் பேசப்படுகிறது. "ஓர் இற் கூடிய புணர் கங்குல்", (அதாவது, இல்லத்தில், ஓர் அறையில், இரவில் அதிகார பூர்வமாகக் கூடுதல்) என்பது அகநானூற்று வரி.

ஆகவே, களவொழுக்கத்தின்போது கூறப்படும் "புணர்ச்சி", உடலுறவைக் குறிக்காது என்று சொல்வது தவறு. புணர்ச்சி பழகுகிறவர்கள் திருமணம் செய்து கொண்டாக வேண்டும் ஒரு கட்டாய நியதி இருந்தது. இக்கால ஆணினத் தமிழ்ப் பண்பாளர்களுக்கு, உடலுறவைப் பற்றிப் பொதுவாகவே இருக்கிற ஒரு விசுவரூப மனச் சிக்கல் (magnificent obsession) அக்காலத் தமிழர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. பக்தி இயக்கத்தின்போது பேசப்பட்ட, பக்தனுக்கும் இறைவனுக்குமிடையே ஏற்படுகின்ற தலைவி - தலைவன் உறவு (உடலுறவு உட்பட - bridal , mysticism) தொன்மைத் தமிழிலக்கியங்களில் கூறப்படும் களவொழுக்கத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

# காரைநகர் பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டுக்கான பனமுகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் தமது நிதி மூலமாக காரைநகர் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்தி திட்டங்களுக்கென 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளனர்.

இதன்படி வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்திற்கு கணினிக் கொள்வனவுக்கென 1 இலட்சம் ரூபாவும், மருதபுரம் ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கு ஒலிபெருக்கிக் கொள்வனவுக்கென 30 ஆயிரம் ரூபாவும்,

வியாவில் மாதர் சங்கத்திற்கு தையல் இயந்திரக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும்,

வேதரடைப்பு சனசமூக நிலையத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும்,

ஊரி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 500 லீற்றர் தண்ணீர்த் தாங்கிகள் கொள்வனவுக்கென 30 ஆயிரம் ரூபாவும்,

வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலைக்கு போட்டோ கொப்பி இயந்திரம் கொள்வனவுக்கென 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும்,

தோப்புக்காடு மறைஞான சம்பந்தன் வித்தியாலயத்திற்கு மின இணைப்புக்கென 50 ஆயிரம ரூபாவும்,

வலந்தலை தியாகி சோபா அறிவாலய புனரமைப்புக் கென 50 ஆயிரம் ரூபாவும்,

மடத்துவளவு நெய்தல் கிராமம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் அமைத்தலுக்கு 1 இலட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளனர்.

# வரணிப் பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வு

(வரணி)

வடக்கு வரணி ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் தற்போது டெங்குநோய் சம்பந்தமான விழிபபுணர்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வரணி சைவப்பிரகாச முன்பள்ளியில் டெங்கு நோய் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றதுடன், தற்போது இப்பகுதியில் இடம்பெறும் திருடடுக்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வட வரணிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி கலந்து கொண்டார்.

மேலும் டெங்கு சம்பந்தமாக சுகாதாரப் பகுதியினர் வீடு வீடாகச் சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், பழைய ரயர்கள், பழைய ரின் மீன்கள், போத்தல்களை அகற்றுமாறும் மண்ணுக்குள் வெட்டிப் புதைத்து விடுமாறும் எதிர்காலத்தில் டெங்கு நோயை இல்லாது ஒழிப்பது பற்றியும் மக்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். (150)



யாழ். எழிலூர் கிராம மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. எழிலூர் கிராம பொதுமக்களின் கோரிக்கைகள் தொடர்பாக நேரடியாகச் சென்று பார்வையிட்ட யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அப்பகுதி பொதுமக்களின் அடிப்படை பிரச்சினைகளான மின்சாரம், குடிநீர்வசதி, சனசமூகநிலைய வசதி, வடிகால் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்தினால் வடமராட்சி பிரதேசத்தின் கல்வி நிலை தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கலவிப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (109)


# சிறுவர் அரங்க நிகழ்வு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டமட்ட சிறுவர் அரங்க நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் 22, 23 ஆம் திகதிகளிலும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மருதங்கேணி கோட்டத்திற்கு செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையிலும், 22 ஆம் திகதி பருத்தித்துறை கோட்டத்திற்கு வட இந்து ஆரம்ப பாடசாலையிலும் 23 ஆம் திகதி கரவெட்டிக் கோட்டத்திற்கு நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

பாடசாலைகள் பங்குபற்றும் மாணவர்களின் பெயர் விபரங்களையும் நாடகப் பிரதி நிதியினையும் அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (109)



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு யாழ். வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூன்று அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் காலை வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் செயலாளர் திருமதி. ர.விஜயலட்சுமி மற்றும் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உட்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதைக் காணலாம். (படம் : நந்தகுமார்)

# ஆயுர்வேதம்



## அழகுக்கு ஆயுர்வேதம்

முகத்தில் கரும்புள்ளிகள்... பருக்கள்... எண்ணெய் வடிதல், முடிகொட்டுதல், முடி அடர்த்தியின்மை, செம்பட்டை நிறம், உடல் பருமன் போன்ற பிரச்சினைகள் உள்ளன. இவை மாற வழி என்ன?

விரைவாகப் பலன் பெறுவதற்கு, ஒரு சில தடாலடி வைத்தியமுறைகள் உள்ளன. தலையணையின்றி மல்லாந்து படுத்து, தலையைச் சிறிது முகவாய்க்கட்டை மேலெழுமாறு வைத்துக் கொண்டு, குங்குமாதித் தைலம் ஓரிரு சொட்டுகளை இரு மூக்குத் துவாரங்களிலும் விட்டு நன்றாக உறிஞ்சி, நெற்றி, மூக்கின் இருபுறங்கள், கழுத்து இவற்றை அழுத்தித் தேய்த்துவிட்டுக் கொள்ளவும். காலை, இரவு பல் தேய்த்த பிறகு இதுபோல தொடர்ந்து செய்து வந்தால், முகத்தில் மழமழப்பு, பூரிப்பு, இளமை ஆகியவை கூடிவிடும். முகத்திலுள்ள கரும்புள்ளிகள் மறையும்.

மசூர்ப் பருப்பை பால் விட்டரைத்து, அந்த விழுதில் பசு நெய் சேர்த்து முகத்தில் பூச முகம் சிவந்து அழகு பெறும். அரிசி மா அல்லது பச்சைப் பயறு மா அல்லது கடலை மா இவற்றின் வடித்த கஞ்சியிலோ, சிறிது புளித்த கெட்டி மோரிலோ குழப்பித் தலைக்குத் தேய்க்கலாம். சிறிது அரப்புத்தூள் அல்லது சீயக்காய்த்தூளைச் சேர்த்தும் பயன்படுத்தலாம். அழுக்கைத் துப்புரவாய் அகற்றும். எலுமிச்சம் பழத்தின் உலர்ந்த தோலின் பொடி, அழுக்கையும் எண்ணெய்ப் பிசுக்கையும் போக்கும். வெண்மை தரும்.

அரிமேதஸ் எனும் தைலத்தை 1-2 கரண்டி அளவு வாயிலிட்டு நன்கு கொப்பளிக்கவும். வாயில் உமிழ்நீர் நிரம்பியதும் துப்பிவிடவும். பிறகு வெந்நீர் விட்டுக் கொப்பளிக்கவும். இரவில் படுக்கும் முன் இவ்வாறு செய்யவும். இதனால் குரல் தெளிவாக மென்மையுடன் இருக்கும். கன்னங்கள் பூரித்து முகம் உருண்டையாகப் புஷ்டியுடன் இருக்கும்.

அஞ்சனக்கல் என்றொரு மருந்து சரக்கு. 15 கிராம் அளவு வாங்கி இரும்புக் கரண்டியில் போட்டு அனலில் நன்கு சுட வைத்துப் பாலில் சூட்டுடன் போட வேண்டும். பால் 100 மி.லீ. போதுமானது. பாலில் போட்ட அஞ்சனக்கல்லை எடுத்துக் கழுவி உலர்த்தி மெல்லிய தூளாக்கிக் கொண்டு, தேன் அல்லது நல்லெண்ணெய் விட்டரைத்து மையாக்கிக் கொள்ளவும். இதனைத் தினமும் காலையில் கண்ணிலிட்டுக் கண்களை மூடி சிறிது நேரம் பொறுத்திருந்து கண்களைத் திறந்து ஒரு மெல்லிய வெள்ளைத் துணியால் துடைத்துவிட வேண்டும்.


இதனால் கண்கள் அழகாகவும், கூரான பார்வையுள்ளவையாகவும் இருக்கும். கண்களிலுள்ள கறுப்பும் வெளுப்பும் சிவப்பும் தெளிந்து தனித்துக் காணும். நெய்ப்புடன் இமைகள் வழவழவென்றிருக்கும்.

கஸ்தூரி மஞ்சள், மாகாளிக்கிழங்கு, வெண்கோஷ்டம், நன்னாரி வேர், விலாமிச்சம் வேர், மருக்கொழுந்து, மகிழம்பூ, கார்போகரிசி, பூலாங்கிழங்கு, ரோஜா மொட்டு இவை வகைக்கு 5 கிராம், வெந் தயம் 15 கிராம், உலர்ந்த எலுமிச்சை பழத்தோல் 50 கிராம் மிஷினில் அரைத்துக் கொள்ளவும். நீர்விட்டுக் குழப்பி சுமார் 15 நிமிடங் கள் வைத்திருந்து, உடலில் தேய்த்துக் குளிக்கப் பயன்படுத்தவும். தோலின் அழுக்கைச் சுத்தம் செய்யும். உடலுக்கு நல்ல் நிறத்தை யும், மிருதுத்தன்மையையும் அளிக்கக் கூடிய வாசனைத் தூள் இது.

பெண்மையை மலரச் செய்யும் பலசர்ப்பிஸ் எனும் மூலிகை நெய் மருந்தைக் காலை, மாலை வெறும் வயிற்றில் சுமார் 10 மி.லீ. உருக்கிச் சாப்பிடலாம். குமார்யாஸவம் 30 மி.லீ. இரவு உணவுக்குப் பிறகு சாப்பிடவும். திருமணத்துக்குப் பிறகு கருத்தரிப்பதற்கு இம்மருந்துகள் உதவிடக் கூடும்.

தேன் கலந்த தண்ணீரை (5 மி.லீ. தேன், அரை கிளாஸ் தண்ணீர்) காலை, இரவு உணவுக்குப் பிறகு அரை மணி நேரம் கழித்துச் சாப்பிட்டால் உடல் பருமன் குறைய வாய்ப்புள்ளது. ஏலாதி சூரணத்தைத் தயிர்த் தெளிவுடன் கலந்து முகத்தில் தேய்த்துக் கழுவப் பயன்படுத்தி வந்தால், முகத்தில் எண்ணெய் படிதல் எனும் தொல்லையிலிருந்து நிவாரணம் பெறலாம்.

# பாடசாலைகள் அபிவிருத்தியில் மட்டுமல்லாது கல்வியிலும் முன்னேற்றமடைய வேண்டும்



(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் பௌதிக வளங்கள் எவ்வாறு மேம்பட்ட நிலையில் காணப்படுகிறதோ அவ்வாறே மாணவர்களின் கல்வி நிலையும் மேம்பாடடைய வேண்டும் என ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

யாழ்.கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலையின் கட்டடத் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் யோகலிங்கம் தலைமையில் நடைபெற்றபோதே நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சுனாமி மற்றும் யுத்த அனர்த்தங்களால் அழிவடைந்த பிரதேசங்களாகவும் அபிவிருத்தி செய்ய வேண்டிய பிரதேசங்களாகவும் காணப்படுகின்ற இப்பிரதேசங்களை ஓர் குறுகிய காலத்தில் அபிவிருத்தி செய்ய முடியாது. முப்பது வருட காலத்துக்கு மேலாக நாம் இழந்தவற்றை படிப்படையாகவே பெறமுடியும்.

இதனடிப்படையில் மீள் குடியேறிய மக்களது வாழ்வாதார மேம்பாடு, வீதி, மின்சாரம் உள்ளிட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து இப்பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

வடக்கின் துரித மீட்சித்திட்டம், வடக்கின் வசந்தம் போன்ற திட்டங்களின் ஊடாக அபிவிருத்திச் செயற்பாடுகள் இப்பிரதேசங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. குறித்த பாடசாலையை தரம் உயர்த்துதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும தெரிவித்தார்.

## பரமர் சங்கமம்



"நான் சொல்லுவதெல்லாம் உண்மை உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை" பிரபல எழுத்தாளர் நிர்வாக அதிகாரியாகவும் இருந்தார்.

90 களுக்கு முன்பாக என்று நினைக்கிறேன். யாழ்.கரையோரக் கடற்தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லத் தடை செய்யப்பட்டதால் அவர்களுக்கு உலர் உணவு வழங்கப்பட்டது.

அப்பகுதியில் அந்த மக்களை நம்பிக் கடை வைத்திருந்த விரல் விட்டெண்ணக்கூடிய எங்களுக்கும் உலர் உணவு வழங்கப்பட வேண்டுமென அவரிடம் விண்ணப்பித்து இருந்தேன்.

எமது சங்கத்தால் பட்டிய லிட்டு கோரிக்கை அடங்கிய எழுத்து மூல அறிக்கை கேட்டிருந்தார். சங்கக் காப்பாளாராக இருந்த நான் கச்சிதமாக அவற்றை ஒழுங்கு செய்து அவரிடம் வழங்கி இருந்தேன்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு முதனாள் பொருட்களை வழங்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. மறுநாளே நிறுத்தும் படி உத்தரவு போடப்பட்டது. அது பற்றி அவரிடம் கேட்ட போது பெட்டிசம் வந்ததாகக் கூறினார்.

ஒரு தடவை கூட உலர் உணவு வழங்கப்படாத போது பெட்டிசம் அனுப் பப்பட்டதாக அவர் கூறிய முதல் பொய்யை கேட்டு வியந்தேன்.

2001 ஆம் ஆண்டு டிசம்பரில் எனது நாவல் நூல் ஒன்று வெளியீட்டுக்கு அவரை வெளியீட்டுரைக்குப் போட்டிருந்தேன். நமது அமைச்சர் வழங்கியிருந்த தொகையில் 10 பேர்களுக்கு நூல்களை வெளியிட பங்கிட்டு பணம் வழங்கியிருந்தார்.

அதில் ஒருவர் அமைச்சருக்கு நன்றி தெரிவித்து நூலில் பிரசுரிக்க மறுத்துவிட்டதால் அதை எனக்கு வழங்குவதாகவும் அதற்கு கடிதம் ஒன்றைச் சமர்ப்பிக்கவும் கேட்டிருந்தார். அதன்படி கடிதம் கொடுத்திருந்தேன்.

சில நாட்களில் முன்சொன்ன கவிஞர் நிபந்தனைக்குட்பட்டு பணத்தை அவருக்கு வழங்கிவிட்டதாகக் கூறினார். அந்த நூல் இதுவரை வெளிவரவே இல்லை. இரண்டாவது சுத்துமாத்தும் அம்பலமானது.

இன்னொரு சமயம் எஸ்.பொ.சாதியபிரச்சினை சிறுகதைத் தொகுதி போட இருப்ப தாகக் கூறி என்னிடமும் சிறுகதை ஒன்றை வாங்கினார். அந்தக் கதைகளை இங்கிருந்து எடுத்துச் சென்று எஸ்.போவிடம் ஒப்படைத்தவர் கூறினார். அப்படி உம்முடைய கதை என்னிடம் தந்து விட்ப்படவில்லையெண்டு மூன்றாவது முறையாகவும் ஏமாற்றப்பட்டேன்.

சில நாட்கள் கழித்து மல்லிகைப் பந்தலில் எனது சிறுகதைகளைப் போடுவித்து உதவுகிறேன் கடிதமும் எழுதி கதைகளையும் தரும்படி கேட்டார்.

தண்ணியும் மூன்று தடவைதான் பிழை பொறுக்கும். எனக்கு மேற் சொன்ன சூடுகள் பத்தாதா அதை நான் நிராகரித்து விட்டேன்.

சுதந்திரன், ஈழகேசரி, ஈழநாடு இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளைத் தொகுத்து விட்ட அவரது ஒரு தொகுப்பில் எனது சிறுகதை ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஈழநாடு இரண்டாம் தொகுதியில் மற்றொரு கதை தெரிவாகி இருந்தது.

இன்னமும் அந்தத் தொகுதி வெளிவரவில்லை. இனி வெளி வரும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. ஏனெனில் அவர் இப்ப நன்றாக வீழ்ந்து போனார். எல்லாருக்கும் இந்த நிலை வருமெண்டு யாருமே முன்னம் சிந்திப்பதில்லை. என்ன நான் செல்லுறே...

## வேள்வித்திருவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உப்புமாவெளி தூண்டல் வடக்கு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வேள்வித்திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் கும்பம் வைத்து விசேட அபிஷேடக ஆராதனைகள் அம்பாளுக்கு இடம்பெறுவதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதிய்ன்று வேள்வித் திருவிழா நடைபெறவுள்ளது.

(04)

## புனரமைப்பு

(வரணி)

வடக்குவரணி கூழாநின்ற புலத்து ஆலய நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் ஆலயத்திற்கு அருகில் உள்ள கொல்லைக்குளம் கடந்த வாரம் பொது மக்களின் ஒத்துழைப்புடன் வெட்டப்பட்டு புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுள்ளது.

இக்குளத்தில் முற்று முழுதாக நீர் வற்றி இருந்த நிலையில் இப்புனரமைப்பு செய்ததால் பொதுவாக கால்நடைகள் தாகம் தீர்ப்பதற்கும் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதுடன் தற்போது இக்குளத்தில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

(150)

# மனநலம் குன்றிய பெண்மீது பாலியல் வன்புணர்வு

(திருநெல்வேலி)

கல்வியங்காட்டுப்பகுதியில் மனநலம் குன்றிய சுமார் 33 வயதுடைய இளம்பெண்ணொருவர் மூன்று நபர்களினால் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் இப்பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

திருமணமாகி கணவனைப் பிரிந்த நிலையில் சில வருடங்களாக வயோதிபத்தந்தையுடன்வாழ்ந்து வரும் இப்பெண் ஏற்கனவே மனநல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

தாயாரை இழந்த நிலையில் இரண்டு சகோதரிகளும் இவருக்குள்ளார்கள். இயலாத் தன்மையுடன் ஓய்வூதியம் பெறும் தனது வயோதிபத் தகப்பனாருடன் இவர் தங்கியிருந்துள்ளார்.

சம்பவ தினம் இரவு மூன்று நபர்கள் இவரது வீட்டுக்கு வந்ததைக் கண்ட இப்பெண் வீட்டை விட்டு இரவு 8.00 மணியளவில் வெளிக்கிளம்பி சற்றுத் தொலைவில் உள்ள இடத்துக்குச் சென்று விடயத்தைக் கூறி தனக்கு வீட்டில் இருப்பதற்குப் பயமாக உள்ளது எனத் தெரிவித்துவிட்டு சென்றுள்ளார்.

அதற்குப் பின்னரே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இப்பெண்ணின் வீட்டிலிருந்த பெறுமதிமிக்க சில தங்கநகைகள், காப்புகள் களவு போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(137)

# முரசின் இன்றைய பலன்

(19.09.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 03 ஆம் திகதி. நட்சத்திரம் சுவாதி. முன்னிரவு 9.55 வரை. சித்தயோகம். திதி சதுர்த்தி பின்னிரவு 12.52 வரை.
இராகுகாலம் 12.03 - 1.33 வரை. சுபநேரம் 4.33 - 6.03 வரை.
எமகண்டம் 7.33 - 9.03 வரை. குளிகன் காலம் 10.33 - 12.03 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அலட்சிய சிந்தனை விலகும். வாழ்வில் உயர புதிய வாய்ப்புகள். திறமைமிகு உழைப்பால் தொழில் வளர்ச்சி. கூடுதல் பணவரவு. கூடுதல் பாசம். |
| ரிஷபம் | வேலை உற்சாகம். இடையூறுகள் விலகும். புதிய யுக்திகள். தொழிலில் உதவி உண்டு. தாராள பண வரவு. சொத்து சேர்க்கை. சுப நிகழ்ச்சி நடத்த திட்டம். |
| மிதுனம் | தேர்ச்சி. உத்வேக செயற்படுகை. தொழிலில் எதிர்பாராத அளவில் வரவேற்பு. சராசரி பணவரவு. கடன் அடைப்பீர்கள். உடல் பிணி தொந்தரவு குறையும். |
| கடகம் | கவனக்குறைவால் இழப்பு. வியாபாரத்தில் போட்டி. செலவுகள் வரும். குடும்ப நண்பர் உதவுவார். பொருள் பாதுகாப்பில் கவனம். உறவினர் வருகை. |
| சிம்மம் | அமைதியுடன் செயல்படுக. ஓய்வு. தொழிலில் மனைவி ஆலோசனை உதவும். பணவரவில் சுணக்கம் மாறும். கடன் கிடைக்கும். உடல் நலம் சீராகும். |
| கன்னி | சிலர் கோபப்படுத்துவர். பேச்சை குறையுங்கள். நேரத்தை வீணாக்காது தவிர்க்கலாம். அளவான பணவரவு. கண்களின் பாதுகாப்பில் கவனம். |
| துலாம் | நண்பர் உதவினாலும் நஷ்டம் தவிர்த்தல் கடினம். தொழில் மந்தம். பணம் கொடுக்கல் வாங்கலில் ஏமாற்றம். குடும்பத்தால் ஆதரவு. புத்திரரால் மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | மறதியால் அவஸ்தை. தொடங்கும் செயல் இனிதாகும. தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழிலில் கூடுதல் மூலதனம். உறவினர்களுக்கு உதவுவீர்கள். |
| தனுசு | நண்பர், உறவினரிடம் வரவேற்பு. அதிருப்தி எண்ணங்கள் குறையும். தொழில் வளர்ச்சியில் ஆதரவு. பணவரவு. பொருள் வாங்குவீர்கள். |
| மகரம் | சிந்தனை, செயலில் புத்துணர்ச்சி. தொழிலில் முன்னேற்றம். அளவான பணவரவு. துணையின் வழியில உதவி. உடல்நலம் குறையும். |
| கும்பம் | பணிகளில் உத்வேகம். தொழில் வளர்ச்சிக்கு துணை இருக்கும். பணவரவால் குதூகலம். வாகனப் பயணம், உடல்நலத்தில் அவதானம். கல்வியில் உயர்வு. |
| மீனம் | உயர்ந்த எண்ணங்கள், உடனடி செயற்பாடு. சூழ்நிலை அனுகூலம். தொழில் சிறக்கும். அந்தஸ்து உயரும். குடும்பத் தேவை பூர்த்தி. தந்தை வழியில் உதவி. பயணம். |

**பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கோடு இடுக**

1. கடா - மறி (கோழி - குஞ்சு, சேவல் - பேடு, நாய் - பூனை)
2. கண் - பார்வை (மூக்கு - மணல், வாய் - ஊமை, காது - ஒளி)
3. மயில் அகவும் ( பசு மேயும், ஆடு - பால், குயில் கூவும்)
4. மாதம் - சித்திரை ( வருடம் - மாதம், கிழமை - திங்கள், வானம் - பூமி)
5. வீடு - மேசன் ( கதவு - தச்சன், வாசல்படி, கல் - சுவர்)

**பழமொழியைப் பூர்த்தி செய்க**

1. விளையும் பயிரை ....................................................
2. கழுதைக்குத் தெரியுமா ....................................................
3. எட்டாக் கனிக்கு ....................................................
4. உப்பிட்டவரை ....................................................
5. ஆழம் அறியாமல் ....................................................

**கீழேயுள்ள அட்டவணையில் சொற்கள் தரப்பட்டுள்ளன. இச் சொற்களைப் பயன்படுத்தி 4 சொற்களுக்குக் குறையாமல் ஐந்து வசனம் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. அழகான | 2. அனைவரும் | 3. மலிவாக | 4 கலைவிழா |
| 5 பொருட்கள் | 6 தீவு | 7 எங்கள் | 8 உள்ளது |
| 9 இலங்கை | 10 பெற்றோரை | 11 சந்தையில் | 12 உடற்பயிற்சி |
| 13 கவர்ந்தது | 14 மாணவர்கள் | 15 உள்ளன | 16 ஓர் |
| 17 அழகிய | 18 செய்தனர் | 19 வகுப்பு | 20 மிகவும் |

....................................................
....................................................
....................................................
....................................................
....................................................



தரம் - 2-3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு

**தமிழ்** முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**பின்வரும் கதைப்பகுதியினை வாசித்து விடை எழுதுங்கள்**

ஒரு வீட்டில் இரண்டு கோழிகள் வசித்து வந்தன. அந்தக் கோழிகள் இரண்டும் வீட்டில் வீசப்படும் கழிவுகளை கொத்தித்தின்று உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தன. சில நாட்களில் இரண்டு கோழிகளும் முட்டையிடத் தொடங்கின. கோழிகள் இட்ட முட்டைகளை வீட்டுக்காரன் எடுத்து அவித்துச் சாப்பிட்டார்.

நாம் இட்ட முட்டைகளை அடைகாத்து குஞ்சுபொரிக்க முடியவில்லையே என்ற கவலையில் கோழிகள் இரண்டும் அருகில் இருந்த காட்டிற்குள் சென்றுவிட்டன. மறுநாள் கோழிகளை காணாத வீட்டுக்காரர் கவலை அடைந்தார். இனி முட்டைகளுக்கு என்ன செய்வது என்ற கவலைதான்.

1. கதையில் வந்துள்ள பிராணி எது?
....................................................
2. வீட்டுக்காரன் முட்டைகளை என்ன செய்தார்?
....................................................
3. கோழிகள் வீட்டை விட்டு எங்கு சென்றன?
....................................................
4. முட்டைகளுக்கு என்ன செய்வது என்று கவலை அடைந்தவர் யார்?
....................................................
5. கதையில் வந்துள்ள பன்மைச் சொல் ஒன்று எழுதுக?
....................................................

**பின்வரும் வாக்கியங்களிற்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுங்கள்.**

1. அம்மாவும் நானும் கடைக்குச் சென்றோம் ..............................
2. மாமா எங்கே சென்றுவிட்டார் ..............................
3. மாணவர்கள் பாடங்களைப் படித்தனர் ..............................
4. மருதனும், பரணியும், சகியும் விளையாடினார்கள் ..............................
5. காற்றுப் பலமாக வீசியது ..............................

### ஒரே எழுத்தை முதலாகக் கொண்ட சொற்களை எழுதுவோம்

1. மே ........ ........ ........ ........
2. தி ........ ........ ........ ........
3. கா ........ ........ ........ ........
4. பா ........ ........ ........ ........
5. வே ........ ........ ........ ........

### குறுக்கெழுத்துப் புதிரை தரப்படும் துப்புக்களைப் பயன்படுத்தி நிரப்புங்கள்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | X | | X |
| | | | |
| | X | | X |

**மேலிருந்து கீழ்**

1. விலை கூடிய உலோகம் நகை செய்வார்கள்.
3. மீன்பிடிக்கப் பயன்படும்.
4. வாசி என்பதன் குறுகி ஒலிக்கும் சொல்.

**இடமிருந்து வலம்**

1. தலைவி என்பதன் எதிர்ப்பாற் சொல்.
2. பொருட்களை களவெடுக்க வருபவன்.

### எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள சொற்கள் ஆக்குங்கள்

1. ரு / ன் / க / ட : ........
2. ம் / வி / ஓ / ய : ........
3. வி / உ / த : ........
4. வு / நி / ல : ........
5. ல் / ண / ம : ........
6. ரை/ தா / ம : ........
7. ம் / ஆ / கா /ய : ........
8. லை / சா / பா /ட : ........



### ஒத்த ஓசையுடைய சொற்கள் எழுதுவோம்

1. முட்டை :........ 2. வட்டி :........
2. வண்டு :........ 7. மலை :........
3. காலை :........ 8. வெள்ளம் :........
4. கடை :........ 9. உரை :........
5. மண் :........ 10. பண்பு :........

### சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குங்கள்

1. வீசியது / பூ / மணம்
........
2. நீரில் / தவளை / பாய்ந்தது
........
3. நாய் / சிறுவனை / துரத்தியது
........
4. வசிக்கும் / யானை / காட்டில்
........
5. மயில் / பறவை / அழகான
........

### எதிர்ச்சொற்களைத் தெரிந்து எழுதுங்கள்

பகல்
உறவு , கனவு
காய்
மாரி, வாழ்வு

1. மாரி கோடை
2. ........ ........
3. ........ ........
4. ........ ........
5. ........ ........

சாவு,
கோடை
நனவு, பகை
இரவு, பழம்

# காலாவதியான கண்ணீர்ப் புகைக்குண்டுகள் பொலிஸார் இடிந்தகரை மக்கள்மீது வீச்சு

## உதயகுமார் அதிர்ச்சித் தகவல்



கூடங்குளம் அணுஉலைக்கு எதிராகப் போராட்டம் நடத்திய மக்கள்மீது பொலிஸார் காலாவதியான கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதால், அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அணுஉலை எதிர்ப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

இடிந்தகரையில் நேற்று உதயகுமாரும், புஷ்பராஜனும் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினர். அப்போது உதயகுமார் கூறுகையில், இடிந்தகரை மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கவில்லை. விமானம், கப்பல் மூலம் மக்கள் கண்காணிக்கப்படுகிறார்கள். போராட்டக்காரர்கள் மீது காலாவதியான கண்ணீர்ப் புகைக் குண்டு வீசப்பட்டது. இதனால் மக்களின் தோல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. போராட்டக்காரர்கள் மீது தேவையற்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

எந்த வெளிநாட்டில் இருந்தும், வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்தும் இந்தியாவில் உள்ள தொண்டு நிறுவனத்திடம் இருந்தும் எங்கள் போராட்டத்துக்காக ஒரு ரூபாய் கூட இதுவரை நாங்கள் வாங்கியது இல்லை. இனி வாங்கவும், மாட்டோம்

திருச்சியில் கைது செய்யப்பட்டுள்ள தீவிரவாதியை எங்களோடு சேர்த்து சம்பந்தப்படுத்தி பேசுவதாக நாங்கள் கேள்விப்பட்டோம். நாங்கள் எந்த நாட்டிற்கும் உளவுவேளை பார்க்கவில்லை நாங்கள் எங்கள் மக்களுக்காக, மக்களோடு மக்களாகப் போராடி வருகிறோம்

இது போன்ற அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சொல்வதை விட்டுவிட்டு, எங்கள் மக்கள் உண்மையான மக்கள், நாட்டைச் சுரண்டாத மக்கள், இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்காத மக்கள், இந்த நாட்டின் இயற்கை வளங்களை வெட்டி விற்காத மக்களுக்காக குரல் கொடுக்க தமிழக முதல்வரும், பிரதமரும், மற்ற அரசியல் தலைவர்களும், அரசு அதிகாரிகளும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

கைதாக தேவையில்லை என்று அகில இந்திய தலைவர்களும், தமிழக அரசியல் தலைவர்களும், மக்களும் சொல்கிறார்கள், அதிலே நியாயம் இருப்பதாக எங்களுக்கு படுகிறது. நாங்கள் எந்தக் குற்றமும் செய்யாதவர்கள்.

ஆனால் நீதிமன்றம் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், விசாரணையை எதிர் கொள்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த நேரத்தில் கைதாவதற்கான எந்தத் தேவையும் இல்லை. எங்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைச் சட்டப்படி எதிர்கொள்வோம்.

நாங்கள் தீவிரவாதிகள் அல்ல, பயங்கரவாதிகள் அல்ல, நாங்கள் இந்த நாட்டின் இயற்கை வளங்களை வெட்டுபவர்கள் அல்ல, கொள்ளைக்காரர்கள் அல்ல, இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கிற துரோகிகள் அல்ல. அதனால் எதைப்பற்றியும் கவலைப்படத் தேவையில்லை என்று உதயகுமார் கூறினார்.

# கூடங்குளம் வந்த அச்சுதானந்தன் கேரள எல்லையில் தடுப்பு



கூடங்குளம் சென்ற கேரள முன்னாள் முதல்வர் அச்சுதானந்தனை எல்லையான கலியக்காவிளையில் தமிழக பொலிஸார் தடுத்தி நிறுத்தியதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கட்சித் தலைமையின் எச்சரிக்கையை மீறி கேரளா முன்னாள் முதல்வரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான அச்சுதானந்தன், அணுஉலைக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வரும் மக்களைச் சந்திப்பதற்காக நேற்று தனது ஆதரவாளர்கள் 100 பேருடன் கூடங்குளம் சென்றார்.

தமிழக - கேரள எல்லையான கலியக்காவிளையில் இரு மாநில பொலிஸாரால் அச்சுதானந்தன் தடுத்து நிறுத்தப்பட்டார். அப்போது, அவரது ஆதரவாளர்களுக்கும், பொலிஸாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து கூடங்குளம் பகுதியில் 144 தடை உத்தரவு அமுலில் இருப்பதால் அனுமதி வழங்க முடியாது என்று அச்சுதானந்தனிடம் பொலிஸார் கூறினர். இதைத் தொடர்ந்து அங்கிருந்து அவர் கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

ஆனால், அணுஉலைக்கு எதிராக போராடி வரும் மக்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பேன்று என்று அச்சுதானந்தன் கூறியுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# டீசல்விலை குறைப்பு பேச்சுக்கே இடமில்லை

## அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

(புதுடில்லி)

டீசல் விலை உயர்வு, மானிய விலையில் வழங்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மீதான கட்டுப்பாடு, சில்லறை வர்த்தகத்தில் 51 சதவீதம் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது என்ற மத்திய அரசின் பொருளாதார முடிவுகளை திரும்பப்பெறும் பேச்சுக்கே இடமில்லை என்று மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

மத்திய அரசின் இந்த முடிவால் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு உள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக டில்லியில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியதாவது:

மத்திய அரசு தனது முடிவுகளைத் திரும்பப் பெற வேண்டுமென எதிர்க்கட்சியினர் கோருகின்றனர். எனக்குத் தெரிந்தவரை, எந்த முடிவையும் திரும்பப் பெறும் உத்தேசம் இல்லை. எதைச் செய்ய முடியும், எதை செய்ய முடியாது என்பது ஓர் அரசுக்குத் தெரியும். ஆலோசனை கூறுவோர் கூறிக்கொண்டே இருப்பர். ஆனால், எதைச் செய்ய முடியுமோ அதைத்தான் நாங்கள் செய்திருக்கிறோம். இதனால், அரசுக்கு எந்த ஆபத்தும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. அரசு ஸ்திரமாகவே உள்ளது. எங்களது கூட்டணியில் உள்ளவர்களும் வெளியிலிருந்து ஆதரிப்பவர்களும் நிலைமையைப் புரிந்துகொள்வார்கள். அவர்கள் மத்திய அரசுக்கு தங்கள் ஆதரவைத் தொடர்ந்து தருவார்கள்.



இந்தியப் பொருளாதாரத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லவும் நமது பொருளாதாரத்தை பாதுகாக்கவும் இந்த நடவடிக்கைகள் அவசியமானவை என்பதை அவர்களுக்குப் புரியவைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ராகுல் குறித்து பேச மோடிக்கு தகுதி இல்லை


(புதுடில்லி)

ராகுல் காந்தியை இன்டர் நேஷனல் தலைவர் என குஜராத் முதல்வர் நரேந்திர மோடி கிண்டலடித்துள்ளதற்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரேணுகா சவுத்ரி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ராகுல் காந்தியைப் பற்றிப் பேசுவதற்கு தகுதியற்றவர் மோடி. ராகுல் காந்தியைப் பொறுத்தவரை மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் தலைவர்தான். இப்போது ராகுல்காந்தியைப் பற்றிய தற்போதைய நிலைப்பாடு குறித்து பின்னர் மோடி உணர்வார் என்றார் அவர்.

# கருணாநிதி, ஸ்டாலின் மீதான அவதூறு வழக்கிற்கு தடைவிதிப்பு



(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி, பொருளாளர் ஸ்டாலின் ஆகியோர் மீது தமிழக அரசு சார்பில் தொடரப்பட்ட அவதூறு வழக்கை விசாரிக்க சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா கொடநாட்டில் தங்கியிருந்தது குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி கருத்து வெளியிட்டிருந்தார். அக்கட்சியின் பொருளாளர் மு.க. ஸ்டாலின் பொதுக் கூட்டம் ஒன்றில் முதல்வர் கொடநாட்டில் தங்கியிருப்பது குறித்து பேசியிருந்தார்.

இது, முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் இருப்பதாகக் கூறி தமிழக அரசு சார்பில் சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி, அக்டோபர் 10ஆம் திகதி கருணாநிதியும், ஸ்டாலினும் நேரில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், இந்த அவதூறு வழக்கு அரசியல் உள்நோக்கம் காரணமாக தொடரப்பட்டது என்றும், செஷன்ஸ் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்கத் தடை விதிக்க வேண்டும் என்றும், நேரில் ஆஜராக விதிக்கப்பட்ட உத்தரவுக்கும் தடை விதிக்கக் கோரி இருவர் சார்பிலும் நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தனித்தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனுவை விசாரித்த நீதிபதி பால் வசந்தகுமார், கருணாநிதி, ஸ்டாலின் ஆகியோர் மீதான அவதூறு வழக்கை விசாரிக்கவும், அவர்கள் நேரில் ஆஜராவதற்கும் இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்.

# காஷ்மீர் எல்லையில் சுரங்கப்பாதை; தீவிரவாதிகளின் ஊடுருவல் கண்டுபிடிப்பு



(புதுடில்லி)

இந்திய எல்லையில் உள்ள காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகள் 80 சுரங்க பாதைகள் அமைத்து பயன்படுத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எல்லைக்கு அப்பால் இருந்து தீவிரவாதிகள் காஷ்மீருக்குள் எப்படி நுழைகிறார்கள்? என்று எல்லையில் ஆய்வு நடத்தியபோது, பாகிஸ்தான் பகுதியிலுள்ள காஷ்மீரில் இருந்து சுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளதனை படையினர் கண்டுபிடித்தனர்.

அந்தச் சுரங்கம் 400 மீற்றர் நீளம் கொண்டதாகவும், 25 மீற்றர் ஆழத்திலும் அமைக்கப்பட்டிருந்தது. நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தீவிரவாதிகள் இந்தச் சுரங்கத்தை தோண்டி உள்ளனர். இதையடுத்து, பாகிஸ்தானை எல்லையாக கொண்ட காஷ்மீர் பகுதி முழுவதும் பாதுகாப்பு படையினர் ஆய்வு மேற்கொண்டனர். நிலவியல் ஆய்வாளர்கள் உதவியுடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் காஷ்மீர் எல்லை முழுவதும் 80 இடங்களில் சுரங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதன் வழியாக தீவிரவாதிகள் காஷ்மீருக்குள் வந்து சென்றது கண்டுபிடிக்கப்பட்டது.

இவை தவிர, குகை வழிப்பாதைகளும் அமைத்து தீவிரவாதிகள் பயன்படுத்தி வந்துள்ளனர். இதேபோல், குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் ஊடுருவதற்கும் சுரங்கம் அமைக்க தீவிரவாதிகள் முயன்றுள்ளனர். மணற்பாங்கான பகுதியாக இருந்ததால், சுரங்கவழி அமைக்கும் தீவிரவாதிகளின் முதல்கட்ட முயற்சி தோல்வி அடைந்திருக்கிறது.

# சிரியாவில் போர்க் குற்றங்கள்;

# ஐ.நா.விசாரணைக்குழு தெரிவிப்பு



(சிரியா)

சிரியாவில் அரச படைகளாலும் கிளர்ச்சியாளர்களாலும் மனிதகுலத்திற்கு எதிரான போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. விசாரணைக் குழுவொன்று தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு எதிராக அரச படைகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பாக மேற்படி விசாரணைக்குழு வலுவான மற்றும் அசாதாரண சான்றுகளை திரட்டியிருப்பதாக, ஜெனீவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இன்று உரையாற்றிய இவ்விசாரணைக் குழுவின் தலைவர் பௌலோ பின்ஹெய்ரோ தெரிவித்துள்ளார்.

குற்றமிழைத்த தனிநபர்களின் பெயர்கள் மற்றும் அலகுகளின் விபரங்களும் திரட்டப்பட்ட ஆதாரங்களில் அடங்கும் எனவும் இவற்றை தேசிய மற்றும் சர்வதேச நீதிமன்றங்களால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியும் எனவ்ும் அவர் கூறினார்.

ஐ.நா.மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஆதாரங்களை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பும் அதிகாரம் கொண்ட ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு அனுப்ப வேண்டும் எனவும் பின்ஹெய்ரோ சிபாரிசு செய்தார்.

உலகச் செய்திகள்

# சவுதியில் மோசமான வீதிவிபத்து; 10 இந்தியர்கள் உட்பட 13 பேர் பலி



(றியாத்)

சவூதி அரேபியாவின் ஜுபைல் என்ற நகரில் நேற்று நடந்த மோசமான வீதி விபத்தில் 10 இந்தியர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜுபைல் நகரில் கேரளாவைச் சேர்ந்த ஒருவர் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். அதில் இந்தியர்கள், நேபாளம் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிறுவன ஊழியர்களுக்காக பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் 50 பேருடன் ஒரு பேருந்து நிறுவனத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தது. அப்போது வழியில், ஒரு லொறியுடன் பேருந்து மோதியது. இதில் லொறியும், பேருந்தும் தீப்பிடித்து எரிந்தன. இதில் பலர் உடல கருகி உயிரிழந்தனர். பலர் தீக்காயமடைந்து அலறித்துடித்தனர்.

மீட்புப் படையினர் விரைந்து வந்து காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பினர். இந்தக் கோர விபத்தில் 10 இந்தியர்கள் உள்பட 13 பேர் உயிரிழந்தனர்

# 700 கி.மீ செல்லக்கூடிய ஏவுகணை பரிசோதனை

(இஸ்லாமபாத்)

700 கிலோமீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கக்கூடிய அணுவாயுத ஏவுகணையை பாகிஸ்தான் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரீட்சித்துள்ளதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஹட்வ்-7 எனப் பெயரிடப்பட்ட இந்த ஏவுகணை பெயர் குறிப்பிடப்படாத இடமொன்றிலிருந்து ஏவப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.



சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் இந்நிகழ்வின்போது சமுகமளித்திருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது





பரிட்டன்- எப்சம் பகுதியில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. வெளியே தரித்து நின்றிருந்த அவுடி கார் ஒன்றில் வேகமாக வந்து மோதிய லெக்ஸஸ் கார், அப்படியே பறந்து, வீடு ஒன்றின் முதல் மாடியில் மோதியது. பறந்த காரை செலுத்தியவர் மற்றும் அதில் இருந்த இரு பயணிகளுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்பது அடுத்த ஆச்சரியம்.

# வெளிநாட்டவர் சென்ற பேருந்துமீது ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்

## 12 பேர் பலி 10 பேர் படுகாயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிற்கு அருகில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 12 பேர் பலியாகியுள்ளதுடன், 10 பேர் காயமடைந்துள்ளனர்.

வெளிநாட்டவர்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த மினி பஸ்ஸொன்றின் மீதே இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


வாகனமொன்றில் வந்த தற்கொலைதாரி மினிபஸ்ஸை இலக்குவைத்து தாக்கியதாக சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் கூறினார்.



6சடலங்கள் காணப்படுவதாக அவ்விடத்தில் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் கூறினார். இருப்பினும் 12 பேர் வரை பலியாகியிருக்கலாமெனவும் பலியானவர்களில் பெரும்பாலனவர்கள் வெளிநாட்டுப் பணியாளர்களெனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்தில் பணியாற்றும் சர்வதேச பணியாளர்கள் இம்மினிபஸ்ஸில் சென்றுகொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது

# நோய்த் தொற்றுக்கு இலக்கான 21 ஆயிரம் ஆடுகள் அழிப்பு



(கராச்சி)

அவுஸ்ரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 21 ஆயிரம் ஆடுகளுக்கு தொற்று நோய் ஏற்பட்டதால், அவற்றை பாகிஸ்தான் அதிகாரிகள் விஷம் வைத்து கொன்று வருகின்றனர்.

பக்ரீத் பண்டிகை நெருங்கும் நிலையில் அவுஸ்ரேலியாவில் இருந்து பக்ரைனுக்கு, 21 ஆயி'ரம் ஆடுகள் இரு வாரங்களுக்கு முன் கப்பலில் அனுப்பப்பட்டன.

தனியார் நிறுவனம் மூலம் அனுப்பப்பட்ட இந்த ஆடுகளுக்கு தொற்று நோய் உள்ளதாகக் கூறி, ஆடுகளை பெற பக்ரைன் அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

இதையடுத்து இந்த ஆடுகள் கடந்த 5 ஆம் திகதி உள்ளூர் இறக்குமதியாளர் மூலம் கராச்சி துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

சிந்து மாகாண அரசு அதிகாரிகள் ஆடுகளை இறக்குமதி செய்ய அனுமதித்தனர். ஆனால் சிந்து மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்து, ஆடுகளை சோதித்த போது 'சால்மோனெல்லா' மற்றும் 'ஆக்டினோமைசஸ்' என்ற தொற்று கிருமிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

உணவுக்கு இலாயக்கற்ற இந்த ஆடுகளை சாப்பிட்டால் உடல் நலக் கேடு ஏற்படும் என்றும் அதிகாரிகள் எச்சரித்தனர்.

இதையடுத்து 21 ஆயிரம் ஆடுகளையும், மீண்டும் ஒரு முறை சோதனைக்கு உட்படுத்தி தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட பின் அவற்றை வி'மிட்டு கொன்று விடுமாறு, கராச்சி சுகாதார ஆணையாளர் ரோஷன் அலி ஷேக் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து இந்த ஆடுகள் கொல்லப்பட்டு வருகின்றன. இவ்விவகாரம் குறித்து அவுஸ்ரேலிய தூதர் பீட்டர் ஹேவர்ட்டிடம், பாகிஸ்தான் அரசு சார்பில் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

கராச்சி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட போது ஆடுகள் ஆரோக்கியமாக இருந்ததாகவும், துறைமுக அதிகாரிகள் ஒப்புதல் அளித்த போது எவ்வித நோய் தொற்றும் காணப்படவில்லை என்றும் ஹோவர்ட் தெரிவித்துள்ளார்.

# செவ்வாய்க் கிரகத்தில் சூரிய கிரகணம்



(அமெரிக்கா)

செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கும் கியூரியாசிடி ரோவர் விண்கலம், அங்கு காணப்பட்ட சூரிய கிரகணத்தை படம் பிடித்து அனுப்பியுள்ளது.

செவ்வாய் கிரகத்தை பற்றி ஆராய அமெரிக்காவின் கியூரியாசிடி ரோவர் விண்கலம், கடந்தாண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

பத்து மாத பயணத்துக்கு பின், 56 கோடியே 30 லட்சம் கிலோ மீற்றர் தூரம் பயணித்து கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி செவ்வாயில் தரையிறங்கியது.

பிரமாண்ட விண் கற்களால் ஏற்பட்ட காலே பள்ளப் பகுதியில், பல்வேறு சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையே இந்த ரோவர் செவ்வாய் கிரகத்தில் 13ஆம் திகதி காணப்பட்ட சூரிய கிரகணத்தை படம் பிடித்து அனுப்பியுள்ளது.

தற்போது நாசா மையம் இந்தப் படத்தை வெளியிட்டுள்ளது.

# கிராமிய வைத்தியசாலை மண்டைதீவில் நிர்மாணம்

## செயலகக் கூட்டத்தில் அமைச்சர் உறுதி



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை ஒருவருட காலத்தில் நிர்மாணிக்கப்படும் என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற தீவக அபிவிருத்திக் கூட்டத்திற்குத் தலைமை ஏற்று அப்பகுதி மக்கள் பிரதிநிதி ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மண்டைதீவுக் கிராமிய வைத்தியசாலை ஏற்கனவே அமைந்திருந்த பகுதியில் நிர்மாணிக்கப்படுவதற்கான வரைபடம் மற்றும் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விபரங்கள் சுகாதார அமைச்சின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் இந்த அனுமதி கிடைத்து ஒருவருட காலத்திற்குள அந்தப் பகுதிக்கான வைத்தியசாலை நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வைத்தியசாலை நிர்மாணப் பணிகள் முடிவடையும் வரையான காலப்பகுதிக்கான அந்தப் பகுதி மக்களது வைத்தியத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மருந்தகம் ஒன்றை அமைத்துத் தருமாறும் அமைச்சரிடம் அப்பகுதி மக்கள் சார்பாகக் கோரிக்கை விடப்பட்டபோது அதற்குப் பதிலளித்த அமைச்சர் இந்தக் கோரிக்கை குறித்து பரிசீலனை செய்வதாகவும் அதற்கான காணி ஒன்றைத் தெரிவுசெய்யுமாறும் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பணித்தார்.

அத்துடன் தற்போது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரினால் மேற்கொள்ளப்படும் நடமாடும் மருத்துவ சேவையைத் தொடர்ந்து அங்கு நடத்துமாறும் அமைச்சர் பணித்துள்ளார். (பா,இ)

# தொடர்கிறது விசாரணை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகளினால் நேற்றும் நேற்று முன்தினமும் 90 வரையான யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் நேற்று மாலை தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த முறைப்பாட்டு விசாரணைகள் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் தொடர்ந்துநடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# இலங்கை அபார வெற்றி




ஐ.சி.சி. ரி - 20 உலகக் கிண்ண போட்டித் தொடரின் முதலாவது போட்டி நேற்று அம்பாந்தோட்டை மைதானத்தில் இடம்பெற்றது. முதலாவது போட்டியில் இலங்கை மற்றும் சிம்பாபே அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாபே அணி முதலில களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 4 விக்கெற்றுக்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாபே அணி100 ஓட்டங்களுடன் சுருண்டது. இலங்கை அணி 82 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. சுழலில் அசத்திய அஜந்தா மெண்டிஸ் 6 விக்கெட் வீழ்த்தினார்.

## ஜனாதிபதி நாளை இந்தியாவுக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டபடி நாளை இந்தியா புறப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் தனது பயணத்தின்போது, சாஞ்சியில் பௌத்த பல்கலைக்கழகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளதுடன், புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஆகியோரையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார்.

# ஒபாமாவின் கொடும்பாவி கிழக்கில் எரிப்பு



அமெரிக்காவில் வெளியிடப்பட்டுள்ள திரைப்படம் ஒன்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து அக்கரைப்பற்று, அம்பாறை, மற்றும் அட்டாளைசசேனை ஆகிய பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதற்கான அழைப்பினை அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் விடுத்திருந்தது. இந் நடவடிக்கையால் வங்கிகள், பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன், அரச அலுவலகங்களும் செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் அமெரிக்கா ஒழிக, நபியை இழிவுபடுத்தும் வீடியோவை உடனடியாகத் தடைசெய், இஸ்லாத்துக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து போன்ற சுலோகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க ஜனாதிபதியின் கொடும்பாவியை அட்டாளைச்சேனை வரை இழுத்துச் சென்று எரித்தனர். இப் பேரணியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் உருவ பொம்மை ஒன்றை தீயிட்டு எரிப்பதனையும், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

# புத்தகக் கண்காட்சி

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி நேற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது. இக்கண்காட்சியை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 9.00 மணிவரையில் பார்வையிட முடியும். கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி இம்முறை 14 ஆவது தடவையாக இடம்பெறுகிறது. இந்தியா, ஜப்பான், மலேசியா, இங்கிலாந்து ஆகிய நாட்டுப் புத்தகங்கள் இங்கு அதிகமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## சிவில் பாதுகாப்பு...

சிவில் குழுவில் இருக்கும் உறுப்பினர்கள் இடமளிக்கக்கூடாது. தமது சமூக விரோதச் செயல்களை சிவில் பாதுகாப்பு குழுவில் இருந்துகொண்டு செய்யமுனையும் நிலையில் இதுகுறித்து மக்களும், பொலிஸாரும் அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டமும் அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். அபிவிருத்தி மற்றும் மொழி அமுலாக்கம் சமநிலையில் இருந்து வருகின்ற நிலையில் சிவில் அமைப்புக்கள் சமூக அக்கறையுடன் முன்னோக்கி செயற்பட வேண்டும். எமது நாடு சிறப்பாகவும், ஆரோக்கியமாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்கப் பிரதேசங்களில் நடைபெறும் குற்றச்செயல்களை இனங்கண்டு அவற்றைத் தகுந்த முறையில் தீர்க்க நாம் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உரையாற்றும்போது ஒவ்வொரு கிராம மட்டத்திலும் நடைபெறுகின்ற குற்றச்செயல்கள் மற்றும் தவறுகள் சுட்டிக் காட்டப்படும் சந்தர்ப்பங்களில் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், முன்நின்று தீர்த்து வைக்க வேண்டும். அவ்வாறு தீர்த்து வைக்கப்படுமானால் நல்ல சமூக கட்டமைப்பினை உருவாக்க முடியுமெனத் தெரிவித்தார்.

இதன்போது சமூகமட்டததில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அவற்றிற்கு துறைசார்ந்தோர் ஊடாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது

இந்நிகழ்வில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குகநேசன், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட, யாழ். மாவட்ட பிரதேச செயலாளர், பிரதேச சபைதவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (இ)

## மருத்துவ சேவை...

சாலை, அக்கராயன்குளம் பிரதேச ஆஸ்பத்திரி மற்றும் வடமாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றுக்கு இந்த வாகனங்கள் வழங்கப்பட விருக்கின்றன.

## முள்ளிவாய்க்காலில்...

படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதயபெரேரா ஆகியோரை சந்தித்து மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றும் பணிகள் மக்களின் இயல்பு வாழ்கை பற்றியும் கேட்டறிந்து கொண்டதாக மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (04)

## அமெரிக்கத் தூதுவர்...

யாடலில் ஈடுபட்டார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பதவியேற்று முதற் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்திருக்கின் றார் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இவர் இன்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ளார் என்று தெரியவருகின்றது.

## அரசின்...

ஆனால் முஸ்லிம் காங்கிரசுக்கு இரு அமைச்சுக்கள் கிடைப்பதற்கும் தமிழர் ஒருவருக்கு அமைச்சுப் பதவி கிடைப்பதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

எது எப்படி இருந்தாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் ஆகிய இரண்டும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அரசின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் அரசு அமைத்திருக்கும் மாகாண ஆட்சியில் ஒத்துழைத்துச் செயற்பட இணங்கியுள்ளன. நேற்றைய பதவியேற்பு வைபவத்தைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசும்போது ஏனைய எட்டு மாகாணங்களைவிட வளமான மாகாணமாக கிழக்கு மாகாண சபை எதிர்காலத்தில் மாற்றப்படும். இதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து செயற்படவுள்ளேன் என கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார். அத்துடன் மாகாண சபையிலுள்ள தமிழ் மற்றும் சிங்கள உறுப்பினர்களுடன் இணைந்து மாகாணத்தை கட்டியெழுப்ப உள்ளேன் என அவர் குறிப்பிட்டார்.

அரசியலுக்கு நான் புதியவனல்ல. கடந்த 1994 ஆம் ஆண்டிலிருந்து நான் அரசியலில் ஈடுபட்டு வருகின்றேன். இதனால் கிழக்கு மாகாணத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது எனக்கு நன்றாக தெரியும் என முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் மேலும் தெரிவித்தார். இதேவேளை, கிழக்கு மாகாண புதிய முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை இரவு அமைச்சர் ஹக்கீமின் கொழும்பு இல்லத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பின் நடவடிக்கைக்கு எதிராக கண்டனத் தீர்மானம்



வலிகாமம் கிழக்கு மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் சபைச் செயலாளர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களைக் கண்டித்து, பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம் பலத்த வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் நிறைவேறியது.

பருத்தித்துறை பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்ச்சி நிரலின்படி கூட்டம் நடைபெற்று, பிற விடயங்கள் ஆராயப்பட்டபோது சபையின் எதிர்க்கட்சித்தலைவர் ஜயாத் துரை ஸ்ரீரங்கேஸ்வரன், வலிகாமம் கிழக்கு மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் சபைச் செயலாளர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைக் கண்டித்து பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றினார்.

இதன்போது ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினர்களுக்கிடையே கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது. சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிசாளர் பூ.சஞ்சீவன், தனக்கு இதுவொன்றும் தெரியாது எனவும், தான் அப்போது அம்பாறையில் இருந்ததாகவும் எனவே தான் எவ்வித கருத்துக்களும் தெரிவிக்கமாட்டேன் எனக் கூறி நழுவிக் கொண்டார். உபதவிசாளரான மா.லோகசிங்கம் தாம் ஒரு கட்சியியைச் சார்ந்தவர்கள் எனவே கண்டனங்களைக் கொண்டுவந்த சபைகளிலும் எமது கட்சியே அதிகாரத்தில் உள்ளது. எனவே கருத்துக் கூறுவதில் சில சங்கடங்கள் உள்ளது எனத் தெரிவித்தார். ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான திருமதி நி.கிருசாந்தி, இ.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கருத்துக் கூறமறுத்து விட்டனர். க.தவயோகநாதன் மட்டும், இது பத்திரிகைச் செய்தி எனவே ஆராய்ந்து அடுத்த கூட்டத்தில் பேசிக்கொள்வோம் என சூசகமாகக் கூறி விலகிக்கொண்டார்.

இதனை ஆட்சேபித்த பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் செயலாளர் பத்திரிகைகளுக்கு தன்னிலை விளக்கமளித்துள்ளார் எனச் சுட்டிக் காட்டி, இதனை யாராவது எதிர்ப்பதாயின் விளக்கமளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எனவே தீர்மானம் நிறைவேறியது.

# குகை கண்டுபிடிப்பு



நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியின் தலவாக்கலை - லிந்துலை பகுதியில் 10 அடி உயரமான சுரங்கப்பாதை ஒன்று நேற்றுக் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா - ஹட்டன் வீதி புனரமைப்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், பெக்கோ இயந்திரம் கொண்டு மலைப் பகுதி ஒன்றை வெட்டியபொழுது லிந்துலை பெயார்வெல் தோட்டத்திற்கு அண்மையில் இந்த சுரங்கப்பாதை வெளிப்பட்டுள்ளது.

இதனைப் பார்வையிட்ட தொல்பொருளியல் அதிகாரிகள் இந்தப் பாதை 3 திசைகளுக்கு பிரிந்து செல்வதாகத் தெரிவித்தனர். இந்தச் சுரங்கப் பாதை தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த ஒன்றாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தொல்பாருளியல் மற்றும் புவிச் சரிதவியலாளர்களைக் கொண்டு பரிசோதனைகளை நடத்தும் வரை தற்காலிகமாக மண் போட்டு மூடப்பட்டுள்ளது.

# பசுபிக் தீவுகளில் அகதிகளுக்கு மற்றுமொரு முகாம்

இலங்கை அகதிகளை தடுத்து வைப்பதற்கான பி.என்.ஜீ. மனாஸ் தீவில் புதிய முகாம் ஒன்றை அமைக்க அவுஸ்ரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே நௌவுரூ தீவில் ஆயிரத்து 200 பேர் தங்கக் கூடிய முகாம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக மேலும் 800 பேரைத் தங்க வைக்கக்கூடிய முகாம் ஒன்றை இந்தத் தீவில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, அவுஸ்ரேலியக் குடிவரத் துறை அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய முகாம் அமைக்கும் பணிகளுக்கு, முன்னர் 'நௌவுரூ' தீவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அகதிகளே பயன்படுத்தப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை, அவுஸ்ரேலியாவில் உள்ள இலங்கை அகதிகள் கட்டம் கட்டமாக நௌவுரூ, தீவுக்கு மாற்றப்படுகின்றனர். எனினும் இந்தத் திட்டத்தில் விருப்பம் இல்லாத 14 இலங்கை அகதிகள் மீண்டும் இலங்கைக்கே திரும்பிச் செல்ல விருப்பம் வெளியிட்டுள்ளதாக மொரிசன் தெரிவித்துள்ளார்.

இதனை அவுஸ்ரேலிய உத்தியோகபூர்வ அதிகாரிகள் யாரும் உறுதிப்படுத்தவில்லை எனினும், இந்தத் தகவல் உண்மையானது என்று கிறிஸ்மஸ் தீவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## உருளைக்கிழக்கு, ரின்மீனுக்கு இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் கிழங்கு, பேணியில் அடைக்கப்பட்ட மீன் என்பவற்றுக்கான இறக்குமதி வரி நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் கிழங்கிற்கான விலை 20 ரூபாவினாலும் பேணியில் அடைக்கப்பட் மீன் 25 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.



கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டபோது...

# நடைமுறைப்படுத்தினால் மட்டுமே 'திவிநெகும' சட்டமாகும்

திவிநெகும' சட்டமூலம் அனைத்து மாகாண சபைகளிலும் நடைமுறைப்படுத்தப்படாத பட்சத்தில் அது சட்டமாக மாற்றமடையாது என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அரசியலமைப்பின் பரிந்துரைக்கமைய 'திவிநெகும' சட்டமூலம் அனைத்து மாகாண சபைகளிலும் ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அது சட்டமாக மாறாது என்றும் உயர்நீதிமன்றம் அறிவித்ததாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

# தேவை

## வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்!

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

இன்று மட்டும்
விசா கெடுபிடி IELTS வங்கிப்பணம் சிக்கல்கள் எதுவுமின்றி
UK Australia New Zealand Canada America Malaysia
பட்டக்கல்விகளை வழங்கும் 7 பல்கலைக்கழகங்கள் பங்கேற்கும்
பல்கலைக்கழக அனுமதியும் தொழில்வாய்ப்பும்
Certificate - Diploma - Foundation - Bachelors - Masters - PhD Programs
INTI International University, Laureate International Universities
Sunway University
The University of Nottingham, United Kingdom - China - Malaysia
SEGi University College
Manipal, Inspired by Life
A.P.U
MAHSA University College

பல்கலைக்கழக பிரதிநிதிகளை நேரில் சந்தித்து உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்க வாருங்கள்
பிரவேசம் இலவசம்! பிரவேசம் இலவசம்!
காலை 9 - மாலை 5 மணி
@ஞானம்ஸ் ஹொட்டேல், யாழ்ப்பாணம்
2012 ஒகஸ்ட்டில் 15 மாணவர்கள் பயணமாகியுள்ளனர்
நீங்களும் இணைந்துகொள்ள அழையுங்கள்!
அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
70% கட்டணக்கழிவு
வங்கிக்கடன் வசதி
25-50% புலமைப்பரிசில்கள்
சிகரம் கல்வி வழிகாட்டி சேவை
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
☎ 021 300 80 60 நேரடி: 0773 616 798
Email: edusikaram@gmail.com Web: www.sikaram.lk
EDUCATION
Supported and Endorsed by:
Ministry of Higher Education, Malaysia
High Commission of Malaysia
(C/1728)